# காலநடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# கால்நடை பராமரிப்பு

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

## மானியக் கோரிக்கை எண். 6

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தமிழ் நாட்டின் கால்நடை வளம் | 7 |
| 3 | துறையின் குறிக்கோள்கள் | 10 |
| 4 | துறையின் மைல்கற்கள் | 13 |
| 5 | நிருவாக அமைப்பு | 26 |
| 6 | கால்நடை மருத்துவ சேவைகள் | 32 |
| 7 | கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் | 40 |
| 8 | நோய் கண்டறிதல், கண்காணித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் முற்றிலும் நீக்குதல் | 47 |
| 9 | கால்நடை அபிவிருத்தி | 67 |
| 10 | திட்டங்கள் | 80 |
| 11 | கால்நடை நிலையங்களின் உட்கட்டமைப்பு | 112 |
| 12 | கால்நடை கணக்கெடுப்பு மற்றும் மாதிரி வரைவுத் திட்டம் | 115 |

| வ. எண். | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 13 | ஜல்லிக்கட்டு – தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சார அடையாளம் | 120 |
| 14 | பிராணிகள் நலம் காக்கும் நடவடிக்கைகள் | 123 |
| 15 | தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை | 134 |
| 16 | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் | 146 |
| 17 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024-25 | 207 |
| 18 | முடிவுரை | 208 |

# கால்நடை பராமரிப்புத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2024–2025

## 1. முன்னுரை

நாட்டின் கிராமப்புற வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தில் கால்நடைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கால்நடை வளர்ப்பும் விவசாயமும் பண்டைய காலங்களிலிருந்து கிராமப்புறங்களில் பின்பற்றப்படும் இரட்டைத் தொழில்களாகும். கிராமப்புறங்களில் 70% க்கும் அதிகமான மக்கள் மேற்கண்ட தொழில்களையே நம்பியிருப்பதால், கால்நடை வளர்ப்பு 'ஒரு வாழ்க்கை முறையாகவே' விளங்குகிறது. நடைமுறையில், கால்நடை வளர்ப்பு மற்றும் பயிர் உற்பத்தித் தொழில்கள், பண்ணை உப தயாரிப்புகளை முழுமையாகப் பயன்படுத்தி, மண் வளத்தைப் பாதுகாத்து, குடும்ப வருமானத்தை அதிகரிக்கிறது. கால்நடை வளர்ப்பு கிராமப்புறங்களில் சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வேலை

வாய்ப்பை குறிப்பாக சுயவேலை வாய்ப்பையும் அதன் மூலம் மதிப்புமிக்க துணை வருமானத்தையும் வழங்குகிறது.

கால்நடைகள் பால், முட்டை, இறைச்சி மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் போன்ற ஊட்டச்சத்து மற்றும் புரதச்சத்து நிறைந்த சமச்சீர் உணவுகளை வழங்குகின்றன. பால் மற்றும் பால் பொருட்கள் மக்களுக்கு முக்கிய புரத ஆதாரமாக உள்ளன. மேலும், சாணம் ஒரு இயற்கை உரமாக இருப்பது பயிர் உற்பத்திக்கு ஒரு முக்கிய உள்ளீடாகும். அதே போன்று சாணத்தில் இருந்து கிடைக்கும் உயிர்வாயு, காளை மாடுகளின் இழுவை சக்தி ஆகியவை கிராமப்புறங்களில் முக்கிய ஆற்றல் ஆதாரங்களாக உள்ளன.

கால்நடைகள் கிராமப்புறங்களின் சமூக, கலாச்சார மற்றும் பாரம்பரிய மதிப்புகளுடன் நெருக்கமான முறையில் தொடர்புடையது

மட்டுமல்லாமல், ஏழை கிராமப்புற குடும்பங்கள் நலிவடையும் சூழ்நிலை ஏற்படும் போது பணமாக்கக்கூடிய ஒரு சொத்தாகவும் உள்ளது. கால்நடைகள் அதிக வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி திறன் கொண்ட தோல் தொழிலுக்கான அடிப்படை மூலப்பொருளையும் வழங்குகின்றன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) கால்நடைத் துறையின் பங்களிப்பு மகத்தானது. 2022-23 ஆம் ஆண்டில், மாநிலத்தின் மொத்த மதிப்பு தற்போதைய விலையில் (முன்கூட்டிய மதிப்பீடு) கால்நடைத் துறை ரூ.1,23,822 கோடியாக இருந்தது. கால்நடைத் துறையானது தமிழ்நாட்டின் மொத்த மாநில மதிப்பு கூட்டலுக்கு (GSVA) சுமார் 5.69% மற்றும் விவசாயம் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளுக்கு 45.32% பங்களிக்கிறது.

கால்நடை பராமரிப்புத் துறையானது கால்நடை சுகாதார சேவைகளை வழங்குவதிலும், மாநிலத்தில்

வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதிலும் பெரும் பங்கு வகிக்கிறது. மேலும், சமூகத்தின் ஏழை, தாழ்த்தப்பட்ட, ஆதரவற்ற பெண்கள், விதவைகள் மற்றும் நலிந்த பிரிவினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு பயனாளிகள் சார்ந்த திட்டங்களையும் இத்துறை செயல்படுத்துகிறது. இது தவிர, கால்நடை வளர்ப்பில் சிறந்த நடைமுறைகள், தீவன மேம்பாடு, நோய்த் தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் நோய்களை கட்டுப்படுத்துதல் போன்றவை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு விரிவாக்க நடவடிக்கைகளிலும் துறை தொடர்ந்து அறிவுப்பூர்வமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் ஈடுபட்டும் கால்நடைகள் மற்றும் இயற்கை வளங்களைச் சமச்சீரான முறையில் திறம்பட பயன்படுத்தியும் இத்துறை மாநிலத்தில் வளர்ந்து வரும் வணிகத்திற்கு பங்களித்துள்ளது.

கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பில் இத்துறை குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்பு வகிக்கிறது. தமிழ்நாடு 2022-23 ஆம் ஆண்டில் 103.17 இலட்சம் மெட்ரிக் டன் பால் உற்பத்தியுடன் நாட்டிலேயே 11-வது இடத்தில் உள்ளது. அதேபோல், 21560.66 மில்லியன் எண்ணிக்கையுடன் முட்டை உற்பத்தியில் 2-வது இடத்திலும், 7.04 இலட்சம் மெட்ரிக் டன் இறைச்சி உற்பத்தியுடன் 6-வது இடத்திலும் உள்ளது.

தமிழகத்தில் தற்சமயம் தனிநபருக்குக் கிடைக்கும் பாலின் அளவு நாளொன்றுக்கு 369 கிராம் மற்றும் முட்டையின் எண்ணிக்கை ஆண்டுக்கு 281 ஆக உள்ளது. இது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் பரிந்துரையான நாள் ஒன்றுக்கு 300 கிராம் பால் மற்றும் ஆண்டுக்கு 180 முட்டைகளை விட கூடுதலாக உள்ளது.

மக்கள்தொகை பெருக்கம், அதிகரித்து வரும் நகரமயமாக்கல், குடும்ப வருமானம் அதிகரித்தல் மற்றும் மாறிவரும் வாழ்க்கை முறைகள் ஆகியவை கால்நடைப் பொருட்களின் தேவையை அதிகரிக்க வழிவகுத்துள்ளன. கிராமப்புற ஏழை மற்றும் இளைஞர்களுக்கு தேவையான தரமான வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் கிராமப்புற பொருளாதார புத்துணர்வு பெற்று ஒட்டுமொத்த நீடித்த நிலையான வளர்ச்சியை வழங்க வழிவகை செய்கிறது. இது கிராமப்புற/நகர்ப்புற புலம் பெயர்வைக் குறைப்பதுடன், பெண்களுக்கு அதிகாரமளித்தும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் போன்ற பல சமூக சுழற்சி மாற்றங்களுக்குப் பங்களிக்கிறது. மொத்தத்தில், கடும் வறுமை மற்றும் பசியை ஒழிப்பதற்கான நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய கால்நடைகள் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன.

## 2. தமிழ் நாட்டின் கால்நடை வளம்

தமிழ்நாடு செழிப்பான மற்றும் பல்வகைப்பட்ட கால்நடை வளத்தைக் கொண்டுள்ளது. 20வது கால்நடை கணக்கெடுப்பின்படி (2019) மாநிலத்தில் 245 இலட்சம் கால்நடைகளும் மற்றும் 1207.80 இலட்சம் கோழிகளும் உள்ளன. இவற்றில், 95.19 இலட்சம் பசுவினங்கள், 5.19 இலட்சம் எருமைகள், 45.00 இலட்சம் செம்மறி ஆடுகள், 98.88 இலட்சம் வெள்ளாடுகள், 0.67 இலட்சம் பன்றிகள், 0.07 இலட்சம் மற்றவை (குதிரைகள், மட்டக் குதிரைகள், கோவேரி கழுதைகள், கழுதைகள் & ஒட்டகம்), 995.16 இலட்சம் பண்ணை கோழிகள் (கோழிகள் & இதர பறவைகள்) மற்றும் 212.64 இலட்சம் புழக்கடை கோழிகள் (கோழிகள் மற்றும் இதர பறவைகள்) என தேசிய கால்நடை வளத்தில் கணிசமான பங்கைப் பகிர்ந்து கொள்கின்றன.

விவசாயிகளால் வளர்க்கப்படும் பெரும்பாலான கால்நடைகள், அதிக பால் உற்பத்தி திறன் கொண்ட

**கலப்பின ஜெர்சி, கலப்பின ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன்** மற்றும் முர்ரா எருமை போன்றவை ஆகும்.

இவை தவிர, **காங்கேயம், உம்பளச்சேரி, ஆலம்பாடி, பர்கூர்** மற்றும் **புலிக்குளம்** போன்ற நாட்டின பசுக்களும், **தோடா** மற்றும் **பர்கூர்** போன்ற நாட்டின எருமைகளும் அந்தந்த பகுதிகளில் வளர்க்கப்படுகின்றன. இதில், மேற்கு மாவட்டங்களான திண்டுக்கல், நாமக்கல், ஈரோடு, கோவை, கரூர் மாவட்டங்களில் காங்கேயம் கால்நடைகள்; தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய கிழக்கு மாவட்டங்களில் உம்பளச்சேரி கால்நடைகள்; மேற்கு மாவட்டங்களான தர்மபுரி, ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் ஆலம்பாடி கால்நடைகள்; தென் மாவட்டங்களான சிவகங்கை, மதுரை, விருதுநகர் மாவட்டங்களில் புலிகுளம் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. ஈரோடு மாவட்டத்தில் பர்கூர் எருமை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் தோடா எருமை ஆகியவையும் வளர்க்கப்படுகின்றன.

அதேபோன்று உள்நாட்டு செம்மறி ஆட்டினங்களான, **மேச்சேரி** (சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள்), **இராமநாதபுரம் வெள்ளை** (இராமநாதபுரம் மாவட்டம்), **சென்னை சிவப்பு** (சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள்), **கீழக்கரிசல்** (ராமநாதபுரம், தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்கள்), **வேம்பூர்** (தூத்துக்குடி மாவட்டம்), **திருச்சி கருப்பு.** (திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்கள்), **கோயம்புத்தூர்** (கோவை மற்றும் மதுரை மாவட்டங்கள்), **கச்சைகட்டி கருப்பு** (மதுரை மாவட்டம்), **செவ்வாடு** (திருநெல்வேலி மாவட்டம்) மற்றும் **நீலகிரி** (நீலகிரி மாவட்டம்) மற்றும் உள்நாட்டு வெள்ளாட்டினங்களான **கன்னி ஆடு** (தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்), **சேலம் கருப்பு** (சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்) மற்றும் **கொடி ஆடு** (தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்) தமிழ்நாட்டில் வளர்க்கப்படுகின்றன.

## 3. துறையின் குறிக்கோள்கள்

- ❖ பசுவினங்களுக்கு உயர் மரபணு திறனுடைய அயலின மற்றும் கலப்பின உறைவிந்தை பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் மேற்கொண்டு, உள்ளூர் இன பசுக்களின் தரத்தையும், முர்ரா இன உறைவிந்தை பயன்படுத்தி எருமைகளின் தரத்தையும் உயர்த்துவது.

- ❖ உள்நாட்டின கால்நடைகளை அவற்றின் வாழ்விடங்களிலேயே பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்குவது.

- ❖ கால்நடை மற்றும் கோழியினங்களின் உற்பத்தி திறனை பெருக்கி அதன் மூலம் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பது.

- ❖ கால்நடைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக

அறிவியல் முறைப்படி கால்நடை பராமரிப்பு நடைமுறைகளை செயல்படுத்துதல்.

❖ கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் தேவையான நவீன மருத்துவ சேவையை உரிய காலத்தே அளிப்பது.

❖ தடுப்பூசிகள் போடுதல், நோய் கண்காணிப்பு மற்றும் நோய் தீவிர கண்காணிப்பு வாயிலாக, கால்நடை நோய்களைத் தடுத்து அனைத்துக் கால்நடைகளின் உடல்நலனை உறுதி செய்வது.

❖ கிராமப்புற ஏழைகளின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடன், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவது.

❖ கால்நடைகள் மூலம் மனிதர்களுக்கு பரவும் நோய்களைக் கண்டறிந்து மனிதர்களை நோயிலிருந்து பாதுகாப்பது.

- ❖ நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
- ❖ விவசாயிகளுக்கும் தொழில் முனைவோருக்கும் அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சியை அளிப்பது.
- ❖ இளைஞர்களிடையே தொழில் முனைவுத் திறன்களை உருவாக்குதல் மற்றும் வழங்குதல்.

## 4. துறையின் மைல்கற்கள்

| | |
|---|---|
| 1799 | ➢ இந்தியாவில் குதிரைகள் மற்றும் ஒட்டகங்களின் இனப்பெருக்கத்தை மேம்படுத்துவதற்காக கிழக்கிந்திய கம்பெனியால் ஐந்து கால்நடை மருத்துவர்கள் லண்டனில் இருந்து வரவழைக்கப்பட்டு, இந்தியாவில் கால்நடை மருத்துவ சேவை தொடங்கப்பட்டது. |
| 1892 | ➢ இராணுவ அதிகாரிகளைக் கொண்டு தனியாக கால்நடை மருத்துவத்துறை தொடங்கப்பட்டது. |
| 1903 | ➢ சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது. |
| 1924 | ➢ இராணுவத்திடம் இருந்து ஒசூர் கால்நடைப் பண்ணை எடுத்துக் கொள்ளப்பட்டு கால்நடை இனப்பெருக்க நிலையம் நிறுவப்பட்டது. |
| 1948 | ➢ துறைத்தலைவர் பதவி, கால்நடை பராமரிப்பு இயக்குநர் என்று மாற்றப்பட்டது. திரவ விந்தைப் பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் அறிமுகப்படுத்தப்பட்டது. |

| | |
|---|---|
| 1959 | ➢ நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. |
| 1969 | ➢ கால்நடை மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் தனியாகத் தொடங்கப்பட்டது. |
| 1970 | ➢ துறை மறுசீரமைக்கப்பட்டது. |
| 1975 | ➢ உறைவிந்துக் குச்சிகள் வாயிலாக செயற்கைமுறை கருவூட்டல் அறிமுகப் படுத்தப்பட்டது. |
| 1977 | ➢ கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. |
| 1981 | ➢ ஈரோட்டில், கோழி நோய் ஆய்வுக்கூடம் நிறுவப்பட்டது. |
| 1999 | ➢ கால்நடை மருத்துவப் பணிகள் இயக்ககம் அமைக்கப்பட்டது. |
| 2003 | ➢ தேசிய பசு மற்றும் எருமையின அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை தொடங்கப்பட்டது. |

| | |
|---|---|
| 2005-2006 | ➢ விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நபார்டு) கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி X மூலம் கால்நடை மருத்துவ நிலையங்களின் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது. |
| 2006-2007 | ➢ கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் 5 மாவட்டங்களில் (சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல் மற்றும் வேலூர்) அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2007-2008 | ➢ தமிழ்நாடு கால்நடை மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் நபார்டு வங்கி ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் – XI நிதியுதவியுடன் தொடங்கப்பட்டது. |
| 2008-2009 | ➢ கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு (தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம்) நீட்டிக்கப்பட்டது. |
| 2009-2010 | ➢ கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு (தஞ்சாவூர், |

| | |
|---|---|
| | மதுரை, திண்டுக்கல், கடலூர் மற்றும் கிருஷ்ணகிரி) நீட்டிக்கப்பட்டது. |
| 2011–2012 | ➢ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் தொடங்கப்பட்டன.<br>➢ தீவன உற்பத்தியை பெருமளவில் அதிகரிக்க மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டது.<br>➢ 585 கிளை நிலையங்கள் ஊரக கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டன.<br>➢ வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கோட்டங்களின் எண்ணிக்கை 65 லிருந்து 76 ஆக அதிகரிக்கப்பட்டது.<br>➢ நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி XVII வாயிலாக 360 கால்நடை நிலையங்கள் மற்றும் 12 கால்நடைப் பண்ணைகளில் உள் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது. |

| | |
|---|---|
| | ➢ இராணிப்பேட்டையில் அமைந்துள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள நுண்ணுயிரி தடுப்பூசிகள் தயாரிப்பு ஆய்வகம் சிறந்த தயாரிப்பு முறைகள் தரத்திற்கு (GMP) மேம்படுத்த தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஆணையிடப்பட்டது. |
| 2012–2013 | ➢ கோழியின அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டது.<br>➢ மாவட்டங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக, புதிய ஐந்து மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன (சென்னை நீங்கலாக).<br>➢ ஒசூரில் அமைந்துள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், கள அளவில் எட்டு மாவட்டங்களிலும் கருமாற்று தொழில் நுட்பம் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப் பட்டது.<br>➢ 19வது கால்நடை மற்றும் கோழியின ஐந்தாண்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப் பட்டது. |

| | |
|---|---|
| | ➢ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ், திருநெல்வேலி–யிலும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரத்தநாட்டிலும் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் புதியதாக நிறுவப்பட்டன. |
| 2013–2014 | ➢ தரமான சேவை மற்றும் சிறந்த நிருவாகத்தை உறுதிப்படுத்தியதற்காக கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநரகத்திற்கு "**நல் ஆளுமை விருது**" வழங்கப்பட்டது.<br>➢ 100 கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டன.<br>➢ 11 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் தோற்றுவிக்கப் பட்டன.<br>➢ கால்நடை பெரு மருத்துவமனைகள், கால்நடைப் பண்ணைகள் மற்றும் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டப் பிரிவுகளுக்கு 53 நுண்ணலை நுண்ணாய்வுக் கருவிகள் (Ultrasound Scanners) வழங்கப்பட்டன.<br>➢ எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய |

| | |
|---|---|
| | நுண்ணலை நுண்ணாய்வு கருவிகள் (Portable Ultrasound Scanners) ஐந்து பன்முக மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டன.<br>➢ உள்நாட்டின மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி மற்றும் பர்கூர் ஆகியவற்றைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.<br>➢ ஒருங்கிணைந்த சிறிய அசைபோடும் விலங்குகள் மற்றும் முயல்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொட்டில் முறையில் வெள்ளாடுகள் வளர்ப்புத் திட்டம் ஐந்து கால்நடைப் பண்ணைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>➢ பெரிய அளவிலான கோமாரி நோய்க் கிளர்ச்சி, போர்க்கால அடிப்படையிலான தீவிர கட்டுப்பாடு நடவடிக்கைகளின் வாயிலாக முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டது.<br>➢ கிராமப்புற புறக்கடை கோழி வளர்ப்பு திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் (சென்னை நீங்கலாக) விரிவு படுத்தப்பட்டது.<br>➢ சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள நாய் இனப் பெருக்கப் பிரிவின் உட்கட்டமைப்பு |

| | |
|---|---|
| | வசதி மேம்படுத்தப்பட்டது.<br>➢ நபார்டு வங்கியின் XIX–வது, ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன், 450 கால்நடை நிலையங்கள் கட்ட ஆணையிடப்பட்டது.<br>➢ இந்தியாவிலேயே முதன் முறையாக "விலங்கினங்களுக்கான ஆதார செல் ஆராய்ச்சி மையம்" (Stem Cell Research Centre for Animals) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 19.06.2013 அன்று துவக்கப்பட்டது.<br>➢ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. |
| 2014–2015 | ➢ ஸ்ரீரங்கம், இலுப்பூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் புதியதாக கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.<br>➢ புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் புதியதாக கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. |

| | |
|---|---|
| | ➢ 100 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன.<br>➢ 50 புதிய கால்நடை கிளைநிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன.<br>➢ 500 கிராமப்புற இளைஞர்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு, செயற்கைமுறை கருவூட்டல் மையங்கள் நிறுவுவதற்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.<br>➢ கால்நடை காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் பொருட்டு, தேசிய கால்நடை இயக்கத் திட்டத்தின் கீழ் விரிவுபடுத்தப்பட்டது.<br>➢ நபார்டு வங்கியின் XX–வது ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன் 226 புதிய கால்நடை நிலையங்கள் கட்டப்பட்டன. |
| 2015–2016 | ➢ நடமாடும் அவசர ஊர்தி திட்டம் ஐந்து மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>➢ 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் நிறுவப்பட்டன, |


| | |
|---|---|
| 2016–2017 | ➢ திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் தீவன மற்றும் நீர் பகுப்பாய்வு ஆய்வகம் நிறுவப்பட்டது.<br>➢ திருப்பூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் புதியதாக கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. |
| 2017–2018 | ➢ சென்னை, சைதாப்பேட்டையில் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு தோற்றுவிக்கப்–பட்டது.<br>➢ 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன.<br>➢ பெரம்பலூர் மற்றும் தேனி மாவட்டத்தில் புதியதாக கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் நிறுவப்பட்டன.<br>➢ சிவகங்கை மாவட்டத்தில் புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது.<br>➢ ஈரோடு மாவட்டத்தில் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. |
| 2018–2019 | ➢ தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் நிறுவப்பட்டது. |

| | |
|---|---|
| | ➢ திருநெல்வேலியில் கால்நடை மற்றும் கோழி தீவன தொழில் நுட்ப மையம் நிறுவப்பட்டது.<br>➢ தர்மபுரி மாவட்டத்தில் ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. |
| 2019–2020 | ➢ சின்னசேலத்தில் ஒருங்கிணைந்த கால்நடை பூங்காவுடன் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது.<br>➢ அரியலூர், கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் நிறுவப்பட்டன.<br>➢ உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் மாட்டின விந்தினை பாலினம் பிரிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டது |
| 2020–2021 | ➢ தென்காசி மாவட்டத்தில் வெள்ளாட்டின ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டது.<br>➢ தர்மபுரி மாவட்டத்தில் திருச்சி கருப்பு செம்மறி ஆட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது.<br>➢ தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் |

| | |
|---|---|
| | பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவ ஆணையிடப்பட்டது<br>➢ இரண்டு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் தேனி மற்றும் உடுமலைப்பேட்டையில் தோற்றுவிக்கப்பட்டன. |
| 2021–2022 | ➢ திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில், நாட்டுக் கோழி வளர்ப்புப் பண்ணை மற்றும் குஞ்சு பொரிப்பக அலகு நிறுவுதல், |
| 2022–2023 | ➢ கைவிடப்பட்ட மற்றும் காயமடைந்த வளர்ப்பு பிராணிகள் மற்றும் பல்வேறு விலங்குகளை பராமரிக்கும் அரசு சாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்காக "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" திட்டம் தொடங்கப்பட்டது.<br>➢ தொலைதூர கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு கால்நடை சேவைகளை வழங்குவதற்காக 245 நடமாடும் கால்நடை வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.<br>➢ சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு மாவட்ட கால்நடை பண்ணையில் நாட்டுகோழி |

| | |
|---|---|
| | இனப்பெருக்க வளாகம், குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை நிறுவுதல்.<br>➢ உதகமண்டலம், மாவட்ட கால்நடைப் பண்ணையில் தனிமைப்படுத்தும் நிலையம் பலப்படுத்தப்பட்டது. |
| 2023-2024 | ➢ உயர் மரபுத்திறன் கொண்ட புதிய கால்நடைகளை அறிமுகம் செய்யும் பொருட்டு 2,490 கால்நடைகள் கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.<br>➢ ஜல்லிக்கட்டு நிகழ்வுகளுக்கான இணைய முகப்பு தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.<br>➢ உள்நாட்டு நாய் இனங்களின் இனப்பெருக்கம் மற்றும் பாதுகாப்பு மையம் சென்னை, சைதாப்பேட்டையில் விரிவாக்கப்பட்டு வருகிறது.<br>➢ அதிக பால் உற்பத்தி திறனுடைய கிடேரிக் கன்றுகளை அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்வதற்காகவும், மாநிலத்தின் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்துகளின் பயன்பாடு தொடங்கப்பட்டுள்ளது. |

# 5. நிருவாக அமைப்பு


இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள்
மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் (31)
கால்நடை நோய் அடுப்பாய் மருந்து நிலையம்
கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு
கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி (31)
(13)
கோட்ட உதவி இயக்குநர் அலுவலகங்கள் (79)
கால்நடை பன்முக மருத்துவமனைகள் (16)
கால்நடை பெரு மருத்துவமனைகள் (14)
கால்நடை மருத்துவமனைகள் (152)
கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் (31)
கோழி நோய் ஆராய்ச்சி ஆய்வு கூடங்கள் (3)
பார்வை கால்நடை மருந்தகங்கள் (25)
கால்நடை மருந்தகங்கள் (2741)
நடமாடும் கால்நடை மருந்தகங்கள் (56)
(50)

கால்நடை பராமரிப்புத்துறை, இந்திய ஆட்சிப்பணி அலுவலர் நிலையிலான கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

தொழில்நுட்பப் பணிகளில் இயக்குநர் அவர்களுக்கு உதவுவதற்காக நான்கு கூடுதல் இயக்குநர்கள், இரண்டு இணை இயக்குநர்கள், ஒரு துணை இயக்குநர் மற்றும் ஒன்பது உதவி இயக்குநர்கள் இயக்குநரகத்தில் பணிபுரிகின்றனர். ஒரு இணை இயக்குநர் (நிர்வாகம்), ஒரு துணை இயக்குநர் (பணியாளர்) மற்றும் இரண்டு நிர்வாக அலுவலர்கள் நிர்வாகம் சம்பந்தமான பணிகளில் இயக்குநருக்கு உதவுகின்றனர்.

நிதித்துறையிலிருந்து நிதி கட்டுப்பாட்டாளர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், கருவூல கணக்குத் துறையிலிருந்து கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், வேளாண்மை

துறையிலிருந்து தீவன அபிவிருத்தி அலுவலர் மற்றும் கூட்டுறவுத் துறையிலிருந்து துணைப் பதிவாளர் ஆகியோர் அயற்பணியில் இயக்குநரகத்தில் துறை சார்ந்த பணிகளில் உதவுகின்றனர்.

மாவட்ட அளவில் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்களும், கோட்ட அளவில் உதவி இயக்குநர்களும் கால்நடை பராமரிப்புத் துறையின் நடவடிக்கைகளை செயல்படுத்துகின்றனர்.

இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்–பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், கூடுதல் இயக்குநர் பதவி நிலையில் உள்ள ஒரு இயக்குநர் தலைமையில், கால்நடை தடுப்பூசிகள், கால்நடை உயிரியல் காரணிகளை தயாரிக்கிறது.

சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்தில் ஒரு இணை இயக்குநரின் தலைமையின் கீழ் செயல்பட்டுவரும்

கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு, மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களின் பணிகளை ஒருங்கிணைத்தும் கண்காணித்தும் வருகிறது.

<u>**அட்டவணை 1: அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை**</u>

| வ. எண். | பதவி பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் | 1 |
| 2 | கூடுதல் இயக்குநர் | 5 |
| 3 | இயக்குநர், கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை | 1 |
| 4 | இணை இயக்குநர் | 35 |
| 5 | முதுநிலை ஆராய்ச்சி அலுவலர் | 3 |
| 6 | துணை இயக்குநர் | 44 |
| 7 | உதவி இயக்குநர் | 311 |
| 8 | ஆராய்ச்சி அலுவலர் | 7 |
| 9 | நிர்வாக அலுவலர் | 33 |
| 10 | உதவி ஆராய்ச்சி அலுவலர் | 17 |
| 11 | கால்நடை உதவி மருத்துவர் | 3032 |

| வ. எண். | பதவி பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 12 | ஆராய்ச்சி உதவியாளர் | 30 |
| 13 | முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் | 183 |
| 14 | அமைச்சுப் பணியாளர் | 1256 |
| 15 | கால்நடை ஆய்வாளர் நிலை–I | 1397 |
| 16 | கால்நடை ஆய்வாளர் நிலை–II | 1221 |
| 17 | கால்நடை பராமரிப்பு உதவியாளர் | 4911 |
| 18 | அடிப்படைப் பணியாளர்கள் | 531 |
| 19 | இதர பணியாளர்கள் | 914 |
| 20 | அயற்பணி | 48 |
| | மொத்தம் | 13980 |

2023–24 ஆம் ஆண்டில் துறையின் நிருவாகத்தை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- 2 கூடுதல் இயக்குநர்கள், 22 இணை இயக்குநர்கள், 33 துணை இயக்குநர்கள் மற்றும் 135 உதவி இயக்குநர்கள் என மொத்தம் 192 தொழில்நுட்பப் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டன. மேலும் 10

மேலாளர் பணியிடங்கள், 37 முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் பணியிடங்கள் மற்றும் 6 பதிவறை எழுத்தர் பணியிடங்கள் ஆகிய பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பட்டுள்ளன.

- 697 கால்நடை உதவி மருத்துவர்கள், இளநிலை உதவியளர் 15 பணியிடங்கள், தட்டச்சர் 10 பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.
- 3 இளநிலை உதவியாளர் பணியிடங்கள், 4 அலுவலக உதவியாளர் மற்றும் டிராக்டர் ஒட்டுநர் பணியிடம் ஆகிய பணியிடங்கள் கருணை அடிப்படையில் நிரப்பப்பட்டன.

## 6. கால்நடை மருத்துவ சேவைகள்

கால்நடை சேவைகள், மாநிலத்தில் பரந்து விரிந்துள்ள கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்படுகின்றன.

இந்நிலையங்கள் மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை, ஈனியல் சிகிச்சை, சினையுறாத் தன்மை நீக்க சிகிச்சை, நோய்த்தடுப்பு, நோய் கண்டறிதல் மற்றும் கட்டுப்பாடு, இனப்பெருக்கம், தீவன மேம்பாடு, விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் பிற விரிவாக்க நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்குகின்றன. கால்நடை சேவைகள் தொழில்முறை பணியாளர்களாலும் சிறு கால்நடை சேவைகள் மற்றும் முதலுதவி ஆகியவை துணை கால்நடை மருத்துவ பணியாளர்களாலும் வழங்கப்படுகின்றன.

1950–60களில் 120 ஆக இருந்த கால்நடை மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை 2023–24 ஆம் ஆண்டில் 3,869 ஆக அதிகரித்துள்ளது. அதில் 16 கால்நடை பன்முக மருத்துவமனைகள், 14 கால்நடை பெரு மருத்துவமனைகள், 152 கால்நடை மருத்துவமனைகள், 2,741 கால்நடை மருந்தகங்கள், 25 பார்வை கால்நடை மருந்தகங்கள், 56 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், 815 கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் 50 பார்வை கிளை நிலையங்கள் ஆகும்.

**அட்டவணை 2: மாவட்ட வாரியாக கால்நடை நிலையங்களின் விவரம்**

| வ. எண். | மாவட்டம் | ப.மு.ம.ம | பெ. ம.ம | கா.ம.ம | கா.ம | பா.கா.ம | ந.கா.ம | கா.கி.நி | பா.கா.கி.நி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 0 | 0 | 2 | 44 | 1 | 1 | 8 | 2 |
| 2 | சென்னை | 1 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 3 | கோயம்புத்தூர் | 1 | 1 | 15 | 98 | 0 | 2 | 26 | 0 |
| 4 | கடலூர் | 0 | 1 | 5 | 92 | 0 | 1 | 56 | 4 |
| 5 | தர்மபுரி | 0 | 1 | 3 | 80 | 0 | 2 | 10 | 1 |
| 6 | திண்டுக்கல் | 1 | 0 | 5 | 106 | 1 | 1 | 62 | 2 |
| 7 | ஈரோடு | 2 | 0 | 6 | 106 | 0 | 3 | 24 | 2 |
| 8 | காஞ்சிபுரம் | 0 | 1 | 0 | 45 | 0 | 1 | 14 | 0 |

| வ. எண். | மாவட்டம் | ப.மு.ம.ம | பெ. ம.ம | கா.ம.ம | கா.ம | பா.கா.ம | ந.கா.ம | கா.கி.நி | பா.கா.கி.நி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | செங்கல்பட்டு | 0 | 1 | 1 | 61 | 0 | 1 | 24 | 0 |
| 10 | கன்னியாகுமரி | 1 | 0 | 2 | 49 | 0 | 2 | 15 | 0 |
| 11 | கரூர் | 0 | 1 | 2 | 72 | 2 | 1 | 10 | 1 |
| 12 | கிருஷ்ணகிரி | 1 | 0 | 2 | 79 | 1 | 1 | 13 | 2 |
| 13 | மதுரை | 1 | 0 | 4 | 96 | 1 | 1 | 52 | 0 |
| 14 | நாகப்பட்டிணம் | 0 | 0 | 3 | 34 | 1 | 1 | 13 | 2 |
| 15 | மயிலாடுதுறை | 0 | 2 | 1 | 38 | 1 | 1 | 6 | 0 |
| 16 | நாமக்கல் | 0 | 0 | 5 | 105 | 0 | 3 | 8 | 1 |
| 17 | பெரம்பலூர் | 0 | 0 | 0 | 37 | 0 | 0 | 5 | 2 |
| 18 | புதுக்கோட்டை | 0 | 1 | 4 | 101 | 1 | 2 | 31 | 3 |
| 19 | இராமநாதபுரம் | 0 | 0 | 4 | 55 | 0 | 0 | 14 | 0 |
| 20 | சேலம் | 1 | 0 | 7 | 149 | 0 | 6 | 9 | 0 |
| 21 | சிவகங்கை | 0 | 0 | 2 | 79 | 1 | 0 | 46 | 0 |
| 22 | தஞ்சாவூர் | 1 | 1 | 7 | 105 | 0 | 3 | 28 | 2 |
| 23 | தேனி | 0 | 0 | 3 | 53 | 1 | 1 | 45 | 0 |
| 24 | நீலகிரி | 0 | 1 | 2 | 29 | 0 | 3 | 7 | 0 |
| 25 | திருப்பூர் | 2 | 0 | 7 | 102 | 1 | 1 | 38 | 3 |
| 26 | திருவள்ளூர் | 0 | 0 | 5 | 88 | 1 | 1 | 25 | 1 |
| 27 | திருவண்ணாமலை | 0 | 1 | 5 | 124 | 2 | 3 | 19 | 5 |
| 28 | திருவாரூர் | 0 | 1 | 10 | 72 | 1 | 1 | 29 | 1 |
| 29 | தூத்துக்குடி | 1 | 0 | 2 | 70 | 2 | 1 | 39 | 4 |
| 30 | திருச்சிராப்பள்ளி | 1 | 0 | 8 | 103 | 2 | 2 | 32 | 2 |
| 31 | திருநெல்வேலி | 1 | 0 | 5 | 51 | 0 | 1 | 16 | 1 |
| 32 | தென்காசி | 0 | 0 | 3 | 61 | 1 | 0 | 18 | 2 |
| 33 | வேலூர் | 1 | 0 | 4 | 38 | 1 | 1 | 6 | 1 |
| 34 | திருப்பத்தூர் | 0 | 0 | 2 | 37 | 0 | 2 | 9 | 0 |
| 35 | இராணிப்பேட்டை | 0 | 0 | 2 | 46 | 0 | 1 | 10 | 0 |
| 36 | விழுப்புரம் | 0 | 0 | 5 | 101 | 0 | 2 | 6 | 5 |
| 37 | கள்ளக்குறிச்சி | 0 | 1 | 2 | 53 | 2 | 2 | 16 | 0 |
| 38 | விருதுநகர் | 0 | 0 | 6 | 82 | 1 | 0 | 26 | 1 |
| மொத்தம் | | 16 | 14 | 152 | 2741 | 25 | 56 | 815 | 50 |

| | | | |
|---|---|---|---|
| * | ப.மு.ம.ம | - | பன்முக மருத்துவமனைகள் |
| | பெ. ம.ம | - | பெருமருத்துவமனைகள் |
| | கா.ம.ம | - | கால்நடை மருத்துவமனைகள் |
| | கா.ம | - | கால்நடை மருந்தகங்கள் |
| | பா.கா.ம | - | பார்வை கால்நடை மருந்தகம் |
| | ந.கா.ம | - | நடமாடும் கால்நடை மருந்தகங்கள் |
| | கா.கி.நி | - | கால்நடை கிளைநிலையங்கள் |
| | பா.கா.கி.நி | - | பார்வை கால்நடை கிளை நிலையம் |

## கால்நடை மருத்துவ நிலையங்களின் அமைப்பும் செயல்பாடுகளும்

- **கால்நடை பன்முக மருத்துவமனைகள்** – பிரதம மருத்துவரைத் தலைவராகவும், அவருக்கு உதவியாக கால்நடை உதவி மருத்துவர்களையும் கொண்டு 24 மணி நேரமும் செயல்பட்டு சிறப்பு சேவைகளை வழங்கி வருகின்றன.

- **கால்நடை பெரு மருத்துவமனைகள்** – பிரதம மருத்துவரைத் தலைவராகக் கொண்டு முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர்கள் உதவியுடன் சிறப்பு சேவைகளை வழங்கி வருகின்றன.

- **கால்நடை மருத்துவமனைகள்** – கால்நடை மருத்துவர்களைத் தலைவராகக் கொண்டு,

விவசாயிகளுக்கு கால்நடை மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன.

- ❖ **கால்நடை மருந்தகங்கள்** – கால்நடை உதவி மருத்துவர்களின் கீழ் செயல்பட்டு, விவசாயிகளுக்கு கால்நடை மருத்துவ சேவைகள், அரசின் நலத் திட்டங்கள் மற்றும் விரிவாக்க சேவைகளையும் வழங்கி வருகின்றன.
- ❖ **பார்வை கால்நடை மருந்தகங்கள்** – அருகிலுள்ள கால்நடை மருந்தகங்களில் பணிபுரியும் கால்நடை உதவி மருத்துவர்களை கொண்டு வாரத்தில் இரண்டு நாட்கள் பிற்பகல் நேரத்தில் கால்நடைகளுக்கு மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன.
- ❖ **நடமாடும் கால்நடை மருந்தகங்கள்** – கால்நடை உதவி மருத்துவர்களின் கீழ், நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி கிராம அளவில் விவசாயிகளின் கால்நடைகளுக்கு மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன.

- ❖ **கால்நடை கிளை நிலையங்கள்** – கால்நடை ஆய்வாளர்கள் மூலம் கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் முதலுதவி சேவைகளை வழங்கி வருகின்றன.

- ❖ **பார்வை கால்நடை கிளை நிலையங்கள்** – அருகிலுள்ள கால்நடை கிளை நிலையங்களில் பணிபுரியும் கால்நடை ஆய்வாளர்களைக் கொண்டு வாரத்தில் இரண்டு நாட்கள் பிற்பகல் நேரத்தில் கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் முதலுதவி சேவைகளை வழங்கி வருகின்றன.

மேற்கண்ட கால்நடை நிலையங்களில் 2023–24 ஆம் ஆண்டு ஆற்றிய பணிகள் பின்வருமாறு:

**அட்டவணை 3: கால்நடை நிலையங்களில் ஆற்றிய பணிகள் 2023–24**

| பணிகள் | | எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சிகிச்சை அளித்தவை (முதலுதவி உட்பட) | 437.65 |
| 2 | செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் | 55.29 |
| 3 | தடுப்பூசி பணிகள் | 391.70 |
| 4 | ஆண்மை நீக்க பணிகள் | 11.37 |
| 5 | குடற்புழு நீக்கம் | 350.81 |
| 6 | கன்று பிறப்பு | 24.50 |

## 6.1 மருந்துகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல்

இத்துறைக்கு தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலமும் மாற்று மருந்துகள் (சித்த மருத்துவம், இதர) தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் மூலமும்

மற்றும் தாது உப்பு கலவைகள் ஆவின் / தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் மூலமும் கொள்முதல் செய்யப்படுகின்றன.

நிதி ஒதுக்கீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4: நிதி ஒதுக்கீடு (2024–2025)**

| **வ. எண்.** | **இனங்கள்** | **ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | மருந்துகள் | 2249.66 |
| 2 | உபகரணங்கள், வேதிபொருட்கள் மற்றும் அறுவை சிகிச்சைக் கருவிகள் | 287.82 |
| 3 | தீவிர சுகாதாரத் திட்டம் (குடற்புழு நீக்கம்) | 105.00 |
| 4 | தாது உப்புக் கலவை | 501.35 |
| 5 | மாற்று மருந்துகள் | 161.53 |
| 6 | அவசரத் தேவைக்கான காப்பு நிதி | 612.04 |
| | **மொத்தம்** | **3917.40** |

## 7. கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை

கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறையின் ஒரு பிரிவாக இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் மாநிலத்தில் உள்ள கால்நடை நிலையங்களின் பயன்பாட்டிற்காக கால்நடை உயிரிகள், நோயறி வினையூக்கிகள் மற்றும் கரைப்பான்கள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது.

### நிலையத்தின் செயல்பாடுகள்

- இந்த நிலையம் நான்கு நுண்ணுயிரி தடுப்பூசிகளையும், ஐந்து நச்சுயிரி தடுப்பூசிகளையும், நான்கு நோய் கண்டறியும் வேதிப் பொருட்களையும் ஒரு கரைப்பானையும் உற்பத்தி செய்து வருகிறது.

- கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான மாநிலத்திற்கு உதவிடும் திட்டத்தின் கீழ் தடுப்பூசி இலக்கின் அடிப்படையிலும், நோய் கிளர்ச்சி மற்றும் பேரிடர் காலங்களின் போது விவசாயிகள் மற்றும் கால்நடை மருத்துவமனைகளின் தேவையின் அடிப்படையிலும் தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் உதவியுடன் நிறுவப்பட்டுள்ள கோமாரி நோய் இணைப்பு சோதனை மையம் மூலம் கோமாரி நோய்க்கான ஊநீர் கண்காணிப்பு, ஊநீர் மேற்பார்வை மற்றும் நோய் காரணியை வகைப்படுத்துதல்.
- விதை மற்றும் வீரியமுள்ள உயிரியல் பொருட்கள் பராமரிக்கப்படுகின்றன.

- இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு தடுப்பூசிகளை விற்பனை செய்தல்.

- தடுப்பூசிகளை பரிசோதிப்பதற்கான தர உத்தரவாதம் மற்றும் தரக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுகிறது.

- கள நிலையங்களுக்கு பல்வேறு தடுப்பூசிகளை சரியான நேரத்தில் விநியோகித்தல்.

- மாநிலத்தில் அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் கோழிக்கழிச்சல் தடுப்பு மருந்தை விநியோகித்தல்.

- இந்நிலையம் மருந்து உரிம ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தடுப்பூசி மருந்து தயாரிப்பு வசதியை நல் உற்பத்தி தரத்திற்கு மேம்படுத்தப்பட்ட முதல் அரசு கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் ஆகும்.

கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை தரமான தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதன் மூலமும், துறையின் அனைத்து கால்நடை நிலையங்களுக்கு வழங்குவதன் மூலமும் கால்நடைகள் மற்றும் கோழிகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் உதவுகிறது. இதன் மூலம் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு என்ற நிலையான வளர்ச்சி இலக்கு எண்.3–ஐ அடைய உதவுகிறது.

**அட்டவணை 5: நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி விவரம் 2023–24**

| வ. எண். | உற்பத்தி செய்யப்படும் ஊநீர் | டோஸ்கள் |
|---|---|---|
| அ. | **நுண்ணியிரி தடுப்பு மருந்துகள் (இலட்சம் டோஸ்களில்)** | |
| 1 | அடைப்பான் | 29.997 |
| 2 | சப்பை நோய் | தேவைக் கேற்ப |
| 3 | துள்ளுமாரி | 0.593 |
| 4 | தொண்டை அடைப்பான் | 1.186 |

| வ. எண். | உற்பத்தி செய்யப்படும் ஊநீர் | டோஸ்கள் |
|---|---|---|
| **ஆ.** | **நச்சுயிரி தடுப்பு மருந்துகள் (இலட்சம் டோஸ்களில்)** | |
| 1 | ஆட்டம்மை | 1.90 |
| 2 | வாத்துக் கழிச்சல் | 23.755 |
| 3 | கோழிக்கழிச்சல் – F வகை | தேவைக் கேற்ப |
| 4 | கோழிக்கழிச்சல் – K வகை | 449.38 |
| 5 | கோழிக்கழிச்சல் – Lasota | 8.175 |
| **இ.** | **நோய் கண்டுபிடிப்பான்கள் (மி.லிட்டரில்)** | |
| 1 | CMT – நோய்க்காரணி | 2000 |
| 2 | கன்று வீச்சு நோய் – நிறமூட்டப்பட்ட நோய்க்காரணி | 1140 |
| 3 | கன்று வீச்சு நோய் –நிறமில்லா நோய்க்காரணி | 1800 |
| 4 | கன்று வீச்சு நோய் –MRT நோய்க்காரணி | 890 |
| 5 | சால்மோனல்லா புல்லோரம் நிறமூட்டப்பட்ட நோய்க்காரணி | 950 |
| **ஈ.** | **கரைப்பான் (லிட்டரில்)** | |
| 1 | பாஸ்பேட் பஃப்பர் கரைசல் (PBS) | 1500 |

**இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தற்போது செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்:**

- நுண்ணுயிர் தடுப்பூசி உற்பத்தி, அடைப்பான் நோய் தடுப்பூசி உற்பத்தி மற்றும் கோழி நோய் தடுப்பூசி உற்பத்தி ஆய்வகங்களை நல் உற்பத்தி தரத்திற்கு (GMP) அமைத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் ஒரு புதிய தர உத்தரவாதம் மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தை நல் சோதனை தரத்திற்கு (GLP) நிறுவுதல் போன்ற திட்டங்கள் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தடுப்பூசி உற்பத்தியினை உயர்த்தவும், சிறந்த தரத்தில் தடுப்பூசி மருந்துகள் தங்கு தடையின்றி இத்துறையின் கள நிலையங்களுக்கும் மற்றும்

பிற மாநிலங்களுக்கு வழங்குவதை செயல்படுத்துகிறது.

**செயல்படுத்தப்படும் புதிய திட்டங்கள்**

- மருந்து தயாரிப்பு ஆய்வகம் ரூ.10.00 கோடி செலவில் நல் உற்பத்தி தரத்திற்கு அமைத்தல்.
- கன்று வீச்சு நோய் நிர்ணயிப்பான்கள் உற்பத்தி ஆய்வகம் ரூ.8.02 கோடி செலவில் நல் உற்பத்தி தரத்திற்கு அமைத்தல்.

அனைத்து தடுப்பூசி உற்பத்தி ஆய்வகங்களையும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் உடன் இணைந்து தடுப்பூசி தயாரிப்பு வசதிகளையும் நல் உற்பத்தி தரத்திற்கு மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 8. நோய் கண்டறிதல், கண்காணித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் முற்றிலும் நீக்குதல்

கால்நடைகளைத் தாக்கும் பல்வேறு நுண்ணுயிரி, நச்சுயிரி, ஓரணு மற்றும் ஒட்டுண்ணிகளால் நோய்கள் ஏற்பட்டு, விவசாயிகளுக்கு பொருளாதார இழப்புகள் ஏற்படுகின்றன. கால்நடை நோய்களைத் தடுப்பது மற்றும் அறவே ஒழிப்பது மூலம் இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு மட்டுமின்றி, நமது கால்நடைகள் மற்றும் கால்நடை பொருட்கள் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்படும்.

மாநிலத்தில் கால்நடைகளில் ஏற்படும் நோய்களை தடுத்திட அந்நோய்களின் அமைப்பு மற்றும் பரவும் விதம் பற்றிய தகவல் அறிவது அவசியம் ஆகும். இத்தகவல்கள், நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் நடவடிக்கைகளைத் திட்டமிடவும் அடித்தளமாக அமையும். நோய்க்கிளர்ச்சிகள் பற்றிய முன்னெச்சரிக்கை

தகவல்களை அளிக்க நோய்களை முன்கூட்டியே கணித்தல் மற்றும் கடுங்கண்காணிப்பு முறை அவசியமாகிறது. விவசாயிகள் மத்தியில் கால்நடை நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துவது குறித்து விழிப்புணர்வு குறைவாக உள்ளதால், இத்துறையின் பங்கு, நோய்த் தடுப்பு மற்றும் அறவே ஒழித்தலில் முக்கியமானதாகும். இத்துறை, நோய்த்தடுப்பு மற்றும் அறவே ஒழித்தல் என்பதை இலக்காகக் கொண்டு, காலமுறை அடிப்படையில் தடுப்பூசி போடுதலை (நோய் அட்டவணைக்கேற்ப) உள்ளடக்கிய முறையான நோய்த்தடுப்பு திட்டத்தைக் கொண்டுள்ளது.

இதை உறுதி செய்வதற்காக, மாநிலத்தில் பின்வரும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

## 8.1 பகுப்பாய்வு பிரிவுகள்

### 8.1.1 கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு

கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. இந்த பிரிவு

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும் ஆய்வகங்களின் செயல்பாடுகளுக்கு வழிகாட்டும் மையமாக செயல்பட்டு வருகிறது.

- இப்பிரிவு மாநில கால்நடை பராமரிப்புத் துறையின் நோய் கண்டறியும் நடவடிக்கைகளை கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும் ஆய்வகங்கள் மூலம் ஒருங்கிணைக்கிறது.
- நோய்க் கிளர்ச்சி காலங்களில், பல்வேறு கால்நடைகள் மற்றும் கோழி நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக புலனாய்வுகள் மேற்கொண்டு கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகளுக்கு உரிய அறிவுரை மற்றும் தீர்வுக்கான வழிமுறைகளை வழங்குகிறது.
- இப்பிரிவு பறவைக் காய்ச்சல் நோயினை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு கால்நடை பராமரிப்பு மற்றும்

மருத்துவப் பணிகள் இயக்குநரகத்தால் அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவின் உறுப்பினர்களுடன் இணைந்து தனியார் கோழிப் பண்ணைகளை ஆண்டுக்கு இருமுறை ஆய்வு செய்கிறது. கால்நடைகளின் ஆரோக்கியத் திற்கான உலக கால்நடை சுகாதார அமைப்பால் பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகளின்படி கட்டாய உயிர் பாதுகாப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு தரநிலைகள் தனியார் கோழிப்பண்ணைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்கிறது.

- செயற்கைமுறை கருவூட்டலுக்காக நோயற்ற பொலிகாளைகளிலிருந்து உறை விந்துக் குச்சிகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, விஞ்ஞானிகள் குழுவுடன் இணைந்து துறையின் உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் உள்ள வீரியமான பொலி

காளைகளில் மேற்கொள்ளப்படும் சோதனையை இப்பிரிவு ஒருங்கிணைத்து செயல்படுகிறது.

- மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் தடுப்பூசிப் பணிகளைக் கண்காணிக்கிறது.

### 8.1.2 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்

நோய் கண்டறிதல், நோய் கண்காணிப்பு மற்றும் நோய்க்கிளர்ச்சி குறித்த தகவல் பெறப்பட்டவுடன், நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை 31 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மேற்கொள்கின்றன.

- இப்பிரிவுகள் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் இறந்த கால்நடைகளிலிருந்து மாதிரிகளை சேகரித்து, நோய்களை கண்டறிவதற்கான சோதனைகளை நடத்துகின்றன.
- இப்பிரிவுகள் நோயறிதலை உறுதிப் படுத்துவதற்காக, நோய்வாய்ப்பட்ட மற்றும் இறந்த கால்நடைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட

மாதிரிகளை மத்திய அரசு ஆய்வகங்களுக்கு அனுப்புகின்றன.

- நோய் பரவுதலைக் கட்டுப்படுத்தவும் எதிர்காலத்தில் நோய்க் கிளர்ச்சியைத் தவிர்ப்பதற்காகவும், இப்பிரிவுகள் நோய்க் கிளர்ச்சிக்கான காரணங்களைக் கண்டறியும் பணியை மேற்கொள்கின்றன.
- நோய் பரவலை அறியவும், நோய் தாக்கும் பகுதிகளில் தடுப்பூசி பணிகளை மேற்கொள்வதற்கான முன்னறிவிப்புகள் குறித்த நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் நோய் முன்னறிவிப்பு அட்டவணையை (Endemic chart) தயாரிக்கின்றன.
- இப்பிரிவுகள் அந்தந்த இடங்களிலேயே நோய் கண்டறிதலை மேற்கொள்வதற்காக, மக்கள் தொடர்பு முகாம்கள் மற்றும் சிறப்பு முகாம்களில் கலந்து கொள்கின்றன.

- கால்நடைகளிலிருந்து மனிதர்களுக்கு நோய் பரவுவதற்கான சாத்தியக் கூறுகளை கட்டுப்படுத்துவதற்காக, இறைச்சிக் கூடங்களுக்குச் சென்று மாதிரிகளைச் சேகரிக்கின்றன.
- கால்நடைகள் மற்றும் கோழிகளின் சுகாதாரத்தைக் கண்காணிப்பதற்காக அரசு மற்றும் தனியார் பண்ணைகளை அவ்வப்போது பார்வையிடுகின்றன.
- கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் நோய் எதிர்ப்புத் திறனை மதிப்பிடுவதற்கு, தடுப்பூசிக்கு முன் மற்றும் பிந்தைய ஊநீர் மாதிரிகள், ஆட்டுக் கொல்லி நோய் மற்றும் கருச்சிதைவு நோய்க்கு தடுப்பூசிக்கு பிந்தைய ஊநீர் மாதிரிகள் சேகரிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொள்கிறது.

குதிரைகள், கழுதைகள், கோவேறு கழுதைகள் மற்றும் மட்டக் குதிரைகளில் புரவிக்காய்ச்சல் நோயை

ஆய்வு செய்வதற்காக திருச்சிராப்பள்ளி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள இப்பிரிவுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 2023–2024 ஆம் ஆண்டில், 4,28,921 சாண மாதிரிகள், 19,957 இரத்த மாதிரிகள், 12,027 திசு தடவல் மாதிரிகள், 2,789 உறையாத இரத்த மாதிரிகள், 5,325 குடல் பூச்சு மாதிரிகள் 20,551 தோல் பூச்சு மாதிரிகள், 4,631 நாசி துவாரத்திலிருந்து எடுக்கப்படும் மாதிரிகள், TLC, DLC, Hb, ESR போன்ற பல்வேறு அளவுருக்களை கண்டறிய 4,564 இரத்தப் பகுப்பாய்வு, 6,818 இரத்தத்தின் உயிர்வேதியியல் பகுப்பாய்வு, 7,954 சிறுநீர் மாதிரிகள், மடிநோய் கண்டறிவதற்கான 13,664 பால் மாதிரிகள், கன்று வீச்சு நோய் கண்டறிய 7428 பால் மாதிரிகள், 9240 இரத்த உறை சோதனைகள், 12,036 ஆண்டிபயாடிக் உணர்திறன் சோதனைகள் மற்றும் 75,234 பிற மாதிரிகள் (உதாரணமாக – வாத்துகளிலிருந்து இரத்த சீரம்

மாதிரிகள்) சோதிக்கப்பட்டன. கூடுதலாக 1,605 கால்நடைகளுக்கு காசநோய் மற்றும் 1,601 கால்நடைகளுக்கு ஜோனீஸ் நோய்க்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 2023–24 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த அளவில் பல்வேறு நோய்களால் 11 நோய்க்கிளர்ச்சிகள் மட்டுமே ஏற்பட்டது.

**அட்டவணை 6: நோய்க்கிளர்ச்சி விவரம் 2023–24**

| நோய்க் கிளர்ச்சி வகை | பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை | நோய்க் கிளர்ச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆட்டம்மை | 1 | 2 |
| அடைப்பான் | 1 | 3 |
| தோல்கழலை நோய் | 2 | 3 |
| ஆப்பிரிக்க பன்றி காய்ச்சல் | 1 | 1 |
| கோமாரி நோய் | 2 | 2 |
| **மொத்தம்** | | **11** |

### 8.1.3 கோழி நோய் கண்டறியும் ஆய்வகம்

கோழிப் பண்ணைகள் அதிகம் உள்ள இடங்களில் கோழிப் பண்ணையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் ஈரோடு, நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய 3 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

இப்பிரிவுகள் பல்வேறு நச்சுயிரி, நுண்ணுயிரி மற்றும் ஒட்டுண்ணிகளின் தாக்குதல்களை கண்டறிந்து கட்டுப்படுத்துவதற்காக எச்சங்கள், இரத்தம் மற்றும் இதர மாதிரிகள் சேகரித்தல், பிரேதப் பரிசோதனை மேற்கொண்டு புதிதாகத் தோன்றும் மற்றும் ஏற்கனவே உள்ள பல்வேறு கோழி நோய்களைக் கண்டறிந்து நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

இப்பிரிவுகள் கோழிப் பண்ணைகளில் உரிய கால இடைவெளிகளில் ஆய்வு மேற்கொண்டு, நோய்

மேலாண்மை நடைமுறைகள் குறித்த ஆலோசனைகளை வழங்குகின்றன.

கோழிகளுக்கு ஏற்படும் நோய்களை சரியான நேரத்தில் கட்டுப்படுத்தும் பொருட்டு தடுப்பூசி விற்பனையும் மேற்கொள்ளப்படுகிறது.

நாமக்கல் மற்றும் ஈரோட்டில் உள்ள கோழியின நோய் கண்டறியும் ஆய்வகங்கள் உயிர் பாதுகாப்பு நிலை II (BSL–II) ஆய்வகங்கள் ஆகும். அவை வீரியம் குறைந்த பறவைக் காய்ச்சலுக்கான அடிப்படை பரிசோதனைகளை மேற்கொள்கின்றன.

மேலும், திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் தீவனம் மற்றும் நீர் பகுப்பாய்வுக்கான ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

கோழியின நோய் ஆராய்ச்சி ஆய்வுக்கூட அலுவலர்கள் முறையாக கோழிப்பண்ணைகளுக்கு சென்று 2023–2024 ஆம் ஆண்டில் 1,53,244 நோய் மாதிரிகளை ஆய்வு செய்துள்ளனர். 3,862 ரேபிட்

பிளேட் திரட்சி பரிசோதனைகள் மேற்கொள்ளப்–பட்டுள்ளன. 62,440 மற்றும் 62,377 நோய் மாதிரிகளில் முறையே ஈ.கோலை மற்றும் சால்மொனெல்லா நுண்ணுயிரிகள் தாக்கம் உள்ளதா என ஆய்வு செய்யப்பட்டுள்ளது. 3,337 தண்ணீர் மாதிரிகள், 1,601 தீவன மாதிரிகள் மற்றும் 8675 காற்று மின்மாதிரிகள் நுண்ணுயிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

கோழி இனங்களில் வெள்ளைக் கழிச்சல் நோய் உள்ளதா என கண்டறிய 37,003 இரத்த உறை பரிசோதனையும், 42,741 இரத்த உறையின்மை பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 934 ஆண்டிபயாடிக் உணர்திறன் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எலைசா பரிசோதனைக்கான 43,902 கோழி இரத்த சீரம், 859 வாத்து இரத்த சீரம் சேகரிக்கப்பட்டு பறவைக் காய்ச்சல் நோய்க்கான உயிர் எதிர்பொருள் ஆய்வு செய்துள்ளனர்.

### 8.1.4 மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம்

இராணிப்பேட்டை மாவட்டம் கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம், மாநிலத்தின் உச்ச நிலை ஆய்வுக்கூடமாகும்.

உலக கால்நடை சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வக நுட்பங்களின்படி இந்த ஆய்வுக் கூடம் நோயை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

மாநிலத்தில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு, கோழி நோய் கண்டறியும் ஆய்வகம், மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் மற்றும் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு ஆகியவற்றின் செயல்பாடுகள், கால்நடைகள் மற்றும் கோழிகளில் ஏற்படும் நோய்களை சரியான நேரத்தில் கண்டறிதல், நோய் முன்னறிவிப்பு, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு உதவுகிறது. இதன் மூலம் 'நல்ல

ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு' என்ற நிலையான வளர்ச்சி இலக்கு எண்.3–ஐ அடைய உதவுகிறது.

## 8.2 நோய் கட்டுப்படுத்தும் பணிகள்

விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் கால்நடை நோய்களான அடைப்பான், சப்பை நோய், தொண்டை அடைப்பான் மற்றும் ஆட்டம்மை நோய்களுக்கு எதிரான தடுப்பூசிகள், இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு தேவைக்கேற்ப கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும், அனைத்து கால்நடை நிலையங்களிலும் நோய் முன்னறிவிப்பு அட்டவணை அடிப்படையில் தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அட்டவணை 7: 2023–24ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசிப் பணிகளின் விவரங்கள்

| நோயின் பெயர் | தடுப்பூசி போடப்பட்ட கால்நடை வகை | தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| அடைப்பான் | பசுவினம், எருமையினம், செம்மறியாட்டினம் மற்றும் வெள்ளாட்டினம் | 29.19 |
| சப்பை நோய் | பசுவினம் | 0.331 |
| கோமாரி நோய் | பசுவினம், எருமையினம், | 172.00 |
| தொண்டை அடைப்பான் | பசுவினம், எருமையினம், | 0.751 |
| ஆட்டுக்கொல்லி நோய் | செம்மறியாட்டினம் மற்றும் வெள்ளாட்டினம் | 53.34 |
| ஆட்டம்மை | செம்மறியாட்டினம் | 0.761 |
| தோல்கழலை நோய் (ஆட்டம்மை தடுப்பூசி பயன்படுத்துதல்) | பசுவினம் | 60.22 |

| நோயின் பெயர் | தடுப்பூசி போடப்பட்ட கால்நடை வகை | தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| கன்றுவீச்சு | 4–8 மாத வயதுடைய கிடேரி கன்றுகள் | 9.35 |
| கோழிக்கழிச்சல் | கோழியினம் | 138.74 |
| **மொத்தம்** | | 464.683 |

பொருளாதார ரீதியாக முக்கியமான நோய்களான கோமாரி நோய், புருசெல்லோசிஸ், தோல்கழலை, அடைப்பான், தொண்டை அடைப்பான், சப்பை நோய், ஆட்டம்மை, ஆட்டுக்கொல்லி போன்றவற்றுக்கு எதிராக கால்நடைகளுக்குத் தொடர்ந்து தடுப்பூசி போடுவது, பல்வேறு ஒன்றிய துறை திட்டங்களின் கீழ் கால்நடைகளில் பரவும் நோய்களுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்து அதன் மூலம் நோய் பரவாமல் தடுக்கிறது மற்றும் மாநிலத்தில் கால்நடைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு என்ற நிலையான வளர்ச்சி இலக்கு எண்.3–ஐ அடைய உதவுகிறது.

### 8.2.1 தேசிய கால்நடை நோய்த் தடுப்புத் திட்டம்

மத்திய அரசின் தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் தகுதியுள்ள மாட்டினங்களுக்கு கோமாரி நோய் மற்றும் கன்று வீச்சு நோய் ஆகியவற்றிற்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

#### 8.2.1.1 தேசிய கால்நடை நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் கோமாரி நோய்த் தடுப்பு திட்டம்:

கோமாரி நோயானது கால்நடைகளில் பெருந்தொற்றை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் ஒரு நச்சுயிரி நோயாகும், சீரான இடைவெளியில் தடுப்பூசி போடுவதன் மூலம் இந்நோய் கட்டுப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் இதுவரை நான்கு சுற்று கோமாரி நோய்த் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நவம்பர் மற்றும் டிசம்பர் 2023 மாதங்களில் முடிவுற்ற நான்காவது சுற்றில் தகுதியுள்ள 85.57 இலட்சம் மாட்டினங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

### 8.2.1.2 தேசிய கால்நடை நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் கன்றுவீச்சு நோய்த்தடுப்பூசிப் பணி

கன்றுவீச்சு நோயானது கால்நடைகளில் கருக்கலைப்பு மற்றும் மலட்டுத்தன்மையை ஏற்படுத்தும் ஒரு நுண்ணுயிர் நோயாகும். நான்கு முதல் எட்டு மாத வயதுடைய கிடேரி கன்றுகளுக்கு வாழ்நாளில் ஒரே ஒருமுறை மட்டும் கன்றுவீச்சு நோய்த் தடுப்பூசி போடப்படும். இத்திட்டத்தின் கீழ், 2023–24 ஆம் ஆண்டில் இரண்டாம் சுற்றில் அனைத்து மாவட்டங்களிலும் 4.88 இலட்சம்

தகுதியுள்ள கிடேரி கன்றுகளுக்கும் மற்றும் மூன்றாம் சுற்றில் 4.47 இலட்சம் தகுதியுள்ள கிடேரி கன்றுகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

### 8.2.2 தோல் கழலை நோய்

தோல் கழலை நோய் என்பது கால்நடைகள் மற்றும் எருமைகளில் அதிக காய்ச்சல், தோல் முடிச்சுகள், பால் உற்பத்தி குறைதல், கருக்கலைப்பு மற்றும் மலட்டுத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்தும் ஒரு நச்சுயிரி தொற்று நோயாகும். 2023–24 ஆம் ஆண்டில் ஈரோடு மற்றும் சென்னை (அடையாறு மண்டலம்) மாவட்டங்களில் இரு நோய்க் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இந்நோயைத் தடுக்கும் விதமாக ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி சுமார் 60.22 இலட்சம் பசுவினங்களுக்கு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2023–இல் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

### 8.2.3 ஆப்பிரிக்க பன்றிக்காய்ச்சல்

ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல் என்பது நச்சுயிரியால் உள்நாட்டு மற்றும் காட்டுப்

பன்றிகளைப் பாதிக்கும் எளிதில் தொற்றகூடிய அபாயகரமான நோயாகும். இந்நோய் மனிதர்களிடையே பரவாது. இந்த தொற்றைத் தடுப்பதற்கோ குணப்படுத்தவோ தற்போது தடுப்பூசி அல்லது மருந்துகள் எதுவும் இல்லை. இந்நோய்க்கு எதிராக அனைத்து மாவட்டங்களிலும் துறை பணியாளர்கள் மூலம் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில் வேலூர் மாவட்டத்தில் ஒரு நோய்க் கிளர்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து 14 பன்றிகள் இறந்துவிட்டன என கண்டறியப்பட்டது.

இந்த நோய் பரவலைத் தடுப்பதற்காக ஆப்பிரிக்க பன்றிக்காய்ச்சல் தேசிய செயல்திட்டத்தின்படி, நோய் பாதிக்கப்பட்ட மையப்பகுதியிலிருந்து (பாதிக்கப்பட்ட மண்டலம்) 1 கிமீ சுற்றளவில் 16 பன்றிகள் மனிதாபிமான முறையில் அழிக்கப்பட்டன. அதன்பிறகு, மாநிலத்தில் தற்போது இந்நோய்த்தொற்று கண்டறியப்படவில்லை.

## 9. கால்நடை அபிவிருத்தி

### 9.1 கால்நடை பண்ணைகள்

இத்துறையின் கீழ் எட்டு கால்நடைப் பண்ணைகள், மூன்று ஆட்டுப் பண்ணைகள், ஒரு கோழிப் பண்ணை மற்றும் ஒரு பசுந்தீவன விதை உற்பத்திப் பண்ணை உள்ளிட்ட 13 துறை பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

**துறை பண்ணைகளின் நோக்கங்கள்:**

- கால்நடை வளர்ப்பு மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப முறைகளை விவசாயிகளுக்கு கொண்டு செல்லுதல்.

- நவீன பண்ணை பராமரிப்பு முறைகள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல் விளக்க அலகுகளாக செயல்படுதல்.

- நோயில்லா உயர் மரபுத் திறன் கொண்ட உறைவிந்து குச்சிகள் மற்றும் **பாலினம் பிரிக்கப்பட்ட விந்தணு குச்சிகள்** உற்பத்தி செய்தல்.

- விவசாயிகளுக்கு உயர்மரபுத் திறன் கொண்ட கால்நடைகளை விற்பனை செய்தல்

- **இன்–விட்ரோ கருத்தரித்தல்** மூலம் விந்து உற்பத்திக்கு நோயற்ற, உயர் மரபணு தகுதியுள்ள காளைக் கன்றுகளை உற்பத்தி செய்தல்.

- விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பில் சிறந்த மேலாண்மை முறைகள் குறித்த பயிற்சி அளித்தல்.

- கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளித்தல்

**நாட்டின மாட்டினங்களை பாதுகாத்தல்**

- தமிழ்நாட்டின் நாட்டினங்களான காங்கேயம், பர்கூர் மற்றும் புலிக்குளம் ஆகியவை ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், உம்பளாச்சேரி நாட்டின மாடுகள் கொருக்கை கால்நடை பண்ணையிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

- பிற நாட்டினங்களான சிகப்பு சிந்தி ஓசூர் மாவட்ட கால்நடைப்பண்ணையிலும், தார்பார்கர் மற்றும் சாகிவால், செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், அபிஷேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**அட்டவணை 8: துறை பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் பராமரிக்கப்படும் கால்நடை இனங்கள்**

| வ. எண். | பண்ணையின் பெயர் | வகை | இனங்கள் |
|---|---|---|---|
| 1 | அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி, உம்பளாச்சேரி, ஜெர்சி கலப்பினம், |
| | | எருமையினம் | முர்ரா |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், சிவப்பு சிந்தி, ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், காங்கேயம், பர்கூர், புலிக்குளம் |
| | | செம்மறி ஆட்டினம் | மேச்சேரி |
| | | வெள்ளாட்டினம் | தலைச்சேரி, கொடியாடு, சேலம் கருப்பு |
| | | பன்றியினம் | பெரிய வெள்ளை யார்க்ஷையர் |
| | | கோழிகள் | அசில் |
| | | குதிரைகள் | கத்தியவார் மற்றும் தரோப்ரெட் இனம் |
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், சாஹிவால் |
| | | செம்மறி ஆட்டினம் | கீழக்கரிசல் |
| | | வெள்ளாட்டினம் | கன்னிஆடு |

| வ. எண். | பண்ணையின் பெயர் | வகை | இனங்கள் |
|---|---|---|---|
| | | பன்றியினம் | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| | | கோழிகள் | வனராஜா, அசில், நிக்கோபாரி |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம் |
| 5 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம் |
| | | செம்மறி ஆட்டினம் | இராமநாதபுரம் வெள்ளை |
| | | வெள்ளாட்டினம் | ஜமுனாபாரி |
| 6 | மாவட்ட கால்நடைப் பண்ணை, நடுவூர் (தஞ்சாவூர் மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம் |
| | | எருமையினம் | முர்ரா |
| 7 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், தார்ப்பார்க்கர், சாஹிவால், காங்கேயம் |
| | | செம்மறி ஆட்டினம் | இராமநாதபுரம் வெள்ளை |
| | | வெள்ளாட்டினம் | ஜமுனாபாரி, தலைச் சேரி |

| வ. எண். | பண்ணையின் பெயர் | வகை | இனங்கள் |
|---|---|---|---|
| | | பன்றியினம் | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| | | கோழிகள் | அசில் |
| 8 | கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்) | பசுவினம் | உம்பளாச்சேரி |
| 9 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் (கள்ளக்குறிச்சி மாவட்டம்) | செம்மறி ஆட்டினம் | மேச்சேரி, சென்னை சிவப்பு |
| | | வெள்ளாட்டினம் | சேலம் கருப்பு, தலைச்சேரி |
| 10 | ஆட்டுப்பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்) | செம்மறி ஆட்டினம் | சென்னை சிவப்பு |
| 11 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்) | செம்மறி ஆட்டினம் | வேம்பூர் |
| | | வெள்ளாட்டினம் | கன்னிஆடு |
| 12 | கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம் (செங்கல்பட்டு மாவட்டம்) | கோழிகள் | வனராஜா, நிக்கோபாரி, கடக்நாத், வெள்ளை லெகார்ன், அசில், கினியாகோழி |
| | | வான்கோழிகள் | பெல்ட்ஸ்வில்லி வெள்ளை |
| | | காடை | ஜப்பானிய காடை |
| 13 | தீவன விதை உற்பத்திப் பண்ணை, படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்) | | தீவன சோளம் கோஎப்எஸ்–31, கம்பு நேப்பியர்–கோ4, கோ5, வேலி மசால், அகத்தி |

**இனவாரியாக விற்பனை விபரம்**

2023-24 ஆம் ஆண்டில், 247 கன்றுகள், 967 செம்மறியாட்டு குட்டிகள், 787 வெள்ளாட்டு குட்டிகள் மற்றும் 732 பன்றி குட்டிகள் இனவிருத்திக்காக விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், 22,789 கோழிக் குஞ்சுகளும், 2,34,850 முட்டைகளும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**குறிப்பிடத்தக்க செயல்பாடுகள்**

- உள்இனவிருத்தி நிகழ்வைக் குறைக்கவும், கால்நடைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் துறை சார்ந்த பண்ணைகளில் புதிய கால்நடைகளை கொள்முதல் செய்வதற்கு ரூ.261.31 இலட்சம் நிதி, மாநில அரசினால் வழங்கப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கொருக்கை கால்நடைப் பண்ணையில் உம்பளாச்சேரி நாட்டின மாடுகளை பாதுகாத்திட இராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டத்தின் மூலம் ரூ.213 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- நடுவூர் மாவட்ட கால்நடைப்பண்ணையில் உள்ள பயிற்சி நிலையத்திற்கான வலுப்படுத்திட ரூ.50 இலட்சம் நிதி இராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- துறை பண்ணைகளில் பணிபுரியும் 20 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு கேரளா கால்நடை அபிவிருத்தி வாரியத்தில் (KLDB) பயிற்சி மேற்கொள்ள ரூ.8.00 இலட்சம் இராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.
- இராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூ.6.00 இலட்சம் நிதியிலிருந்து 200 கால்நடை ஆய்வாளர்களுக்கு மாவட்ட

கால்நடைப்பண்ணை நடுவூர் மற்றும் ஓசூரில் பயிற்சி அளிக்கப்பட்டது.

## 9.2 உறைவிந்து உற்பத்தி

இத்துறையின் கீழ், ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப்பண்ணை, மாவட்ட கால்நடைப்பண்ணை, ஓசூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய 3 உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

- 2023-24ஆம் ஆண்டில், ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தரநிர்ணயத்தின்படி, இந்த நிலையங்களில் 57.48 இலட்சம் உயரிய மரபணு திறன்கொண்ட உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்த உறைவிந்து நிலையங்கள் ஒன்றிய அரசின் மத்திய கண்காணிப்புப் பிரிவால் அவ்வப்போது மதிப்பீடு செய்யப்படுகின்றன.

- உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் ரூ 47.50 கோடி மதிப்பீட்டில் மூன்று ஆண்டுகளில் 7.20 லட்சம் பாலினம் பிரிக்கப்பட்ட விந்து உற்பத்தி செய்ய வசதிகள் ஏற்படுத்தபட்டுள்ளன. இதுவரை 3,09,735 டோஸ்கள் தயாரிக்கப்பட்டு, கோயம்புத்தூர், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், ராணிப்பேட்டை, தஞ்சாவூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பத்தூர், தூத்துக்குடி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் பாலினம் பிரிக்கபட்ட விந்து கொண்டு செயற்கைமுறை கருவூட்டல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாலினம் பிரிக்கப்பட்ட விந்து கொண்டு மொத்தம் 6766 செயற்கைமுறை கருவூட்டல்கள் பதிவாகியுள்ளன.

## 9.3 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி

- துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மூன்று உறைவிந்து உற்பத்தி நிலையங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உறைவிந்து குச்சிகள், 31 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகள் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணிக்கென விநியோகிக்கப்பட்டு வருகின்றன.
- உறைவிந்து குச்சிகளைத் தவிர திரவ நைட்ரஜன் அனைத்து கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.
- ஈரோடு, கரூர், மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு கால்நடை பெருக்கம் மற்றும் தீவன

அபிவிருத்தி அலகுகள் தலா ரூ.50 இலட்சம் செலவில் ராஷ்ரிய கோகுல் மிஷன் திட்டத்தின் மூலம் வலுப்படுத்திட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- மேலும் இவ்வலகுகள் மூலம்,தீவன விதைகள் / புல் கரணைகள் மற்றும் தீவன மரக்கன்று நாற்றுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டு வருகின்றன.

9.4 நாய் வளர்ப்புப் பிரிவு, சைதாப்பேட்டை

நாட்டு நாய்கள் பராமரிப்பது என்பது கலாச்சார பாரம்பரியம் சார்ந்தது. மேலும் நாட்டு நாய்கள் பாதுகாப்பது மரபியல் பரிணாம வளர்ச்சி ஆகியவை குறித்து அறிய முடியும். இராஜபாளையம், சிப்பிப்பாறை கோம்பை மற்றும் கன்னி ஆகிய சிறந்த நாட்டின நாய் இனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்த நாட்டின நாய்களைப் பாதுகாத்து இனப்பெருக்கம் செய்ய 1980–ஆம் ஆண்டில் சென்னை

சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. இப்பிரிவிலிருந்து பெறப்படும் நாய்க்குட்டிகள் பொதுமக்களுக்கு பதிவு மூப்பு அடிப்படையில் அரசு நிர்ணயிக்கும் விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், கன்னி, ராஜபாளையம், சிப்பிப்பாறை மற்றும் கோம்பை போன்ற உள்நாட்டு நாய் இனங்களின் 32 இனப்பெருக்க நாய்களை வளர்க்க ஏதுவாக நவீன வசதிகளுடன் கூடிய புதிய உள்கட்டமைப்பு வசதிகள் கொண்ட **உள்நாட்டு நாய் இனங்களின் பாதுகாப்பு மையம்** ரூ.595 இலட்சம் செலவில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 10. திட்டங்கள்

கால்நடை வளர்ப்பு பல்வேறு வகையான மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கி சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழைகளின் முக்கிய பொருளாதார ஆற்றலாக உள்ளது. வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் மூலம் கிராமப்புறங்களில் நிலையான வளர்ச்சிக்கு வழிவகுத்து அதிக அளவிலான பொருளாதார செயல்பாடுகளை உறுதிசெய்ய முடியும். இதை மனதில் கொண்டு, ஏழை மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் நலனுக்காக பல்வேறு பயனாளிகள் சார்ந்த திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

### 10.1 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்

கிராமங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு நோய்த் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் கால்நடை சுகாதார வசதிகளை

வழங்குவதற்காகவும், விவசாயிகளிடையே கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், 2021 – 22 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ரூ.7.76 கோடி ரூபாய் மொத்த செலவில் 7760 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இம்முகாம்களில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல்
- குடற்புழு நீக்கம் செய்தல்
- நோய்களுக்கு எதிரான தடுப்பூசி
- ஆண்மை நீக்கம்
- செயற்கைமுறை கருவூட்டல்
- மலடு நீக்க சிகிச்சைகள்
- சினை பரிசோதனை

➢ சுண்டுவாத அறுவை சிகிச்சை போன்ற சிறு அறுவை சிகிச்சைகள் (CLP)

➢ சிறப்பு மகப்பேறியல் மருத்துவ உதவி

➢ விவசாயிகளிடையே கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

➢ தாது உப்பு கலவைகள் வழங்குதல்

➢ தீவன பயிர் உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு.

➢ கால்நடை பொருட்கள் உற்பத்தி, சந்தைப்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல் குறித்த நுணுக்கங்கள்.

2021-22, 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளில் தொலைதூர கிராமங்களில் ஆண்டுக்கு 7760 முகாம்கள் வீதம் மொத்தம் 23,280 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 240.92 இலட்சம்

கால்நடைகள் மற்றும் 26.02 இலட்சம் விவசாயிகள் பயனடைந்தனர்.

இத்திட்டத்தின் கீழ், அணுக முடியாத தொலைதூரப் பகுதிகளில் முகாம்கள் நடத்தப்பட்டு, அங்கு கால்நடைகளுக்கு தேவையான சிகிச்சை, தடுப்பூசி செயற்கைமுறை கருவூட்டல், குடற்புழு நீக்கம், போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதன்மூலம் கால்நடைகளின் ஆரோக்கியம் மேம்படுகிறது. இது நிலையான வளர்ச்சி இலக்கு எண்.3 – நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை அடைகிறது.

மேலும், பல்வேறு கால்நடை வளர்ப்பு பணிகள் மற்றும் கால்நடைகளின் நவீன அறிவியல் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது, இதன்முலம் 'தரமான கல்வி' என்ற நிலையான வளர்ச்சி இலக்கு எண்.4 – ஐ அடையலாம்.

கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களிலும் 100 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, அம்முகாம்களில் சிகிச்சை, குடற்புழு நீக்கம், தடுப்பூசி, செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை, மற்றும் தாது உப்பு வழங்குதல் போன்ற பணிகள் 97,019 கால்நடைகளுக்கும் 30,356 கோழிகளுக்கும் மேற்கொள்ளப்பட்டு, 20,585 கால்நடை வளர்ப்போர் பயனடைந்துள்ளனர்.

## 10.2 தீவன அபிவிருத்தி

பயிரிடப்பட்ட தீவனங்கள், பயிர் கழிவுகள் (பெரும்பாலான உலர் தீவனங்கள்) மற்றும் கிராமப்புற புறம்போக்கு நிலங்கள், நிரந்தர மேய்ச்சல் நிலங்கள் போன்ற முக்கிய ஆதாரங்களில் இருந்து கால்நடைகள் தீவனத்தைப் பெறுகின்றன. பால் மற்றும் பால் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் கிராமப்புற பொருளாதாரம் உயர்த்தப்படுகிறது. பசுந்தீவனம் வழி ஊட்டச்சத்தினை கால்நடைகளுக்கு வழங்குவது

பால் உற்பத்தியில் சிக்கனத்தின் ஆதாரமாகும். பசுந்தீவனம் கறவை மாடுகளின் ஆரோக்கியத்தை பராமரிக்கவும், இனப்பெருக்க திறனை மேம்படுத்தவும் உதவுகிறது. எனவே பசுந்தீவனத்தை கால்நடைகளின் உணவில் அதிகரிப்பதன் மூலம் பால் உற்பத்தி செலவு குறைந்து இலாபத்தை நேரடியாக அதிகரிக்க முடியும்.

கலப்பின கறவை மாடுகளுக்கு ஊட்ட சத்தான தீவனம் அளித்தல், அறிவியல் மற்றும் பொருளாதார மேலாண்மைக்கு அவசியமாக உள்ளது. பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனங்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வறட்சி காலத்தில் தீவன பற்றாக்குறையை சமாளிக்க ஆண்டு முழுவதும் தீவனம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு கறவைமாட்டுப் பண்ணைகளில் அதிகப்படியான தீவனத்தை பதப்படுத்திய தீவனமாகவோ அல்லது வைக்கோல் வடிவிலோ பாதுகாக்க வேண்டியது அவசியம். சாகுபடி பரப்பளவு

சுருங்குவதன் விளைவாக சிறு மற்றும் குறு விவசாயிகள் பல்லாண்டுப் புல் தீவனங்களை பயிரிடுவதில்லை. எனவே பசுந்தீவன மகசூலை அதிகரிக்க மற்றும் பாதுகாக்க இத்துறை மாநிலம் மற்றும் ஒன்றிய அரசின் பங்களிப்புடனான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இத்துறையின் கடுமையான முயற்சியினால், கால்நடைகளின் உணவில் தோராயமாக 60–70% பசுந்தீவனம், 20–30% உலர் தீவனம், 5–10% புரதம் மற்றும் நார்ச்சத்து இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு மாநிலத்தில் உள்ள விவசாயிகள் / கால்நடை வளர்ப்பவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தீவன சாகுபடியில் சமீபத்திய தொழில் நுட்பங்களை எடுத்துரைப்பதற்கும், புதிய யோசனைகளை விவசாய சமூகத்திற்கு கற்பிப்பதற்கும், துறை அதிகாரிகளுக்கும் தீவன

உற்பத்தியில் சமீபத்திய, புதுமையான தொழில்நுட்பம் பற்றிய திறனை ஏற்படுத்துவது அவசியமாகும். எனவே, துறை அலுவலர்களுக்கு நாடு முழுவதும் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்களில் அவ்வப்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதன்படி 2023-24 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் செலவில் ஜான்சியில் உள்ள இந்திய புல்வெளி மற்றும் தீவன ஆராய்ச்சி நிறுவனம் (IGFRI) இல் 60 கால்நடை / வேளாண் அலுவலர்களுக்கு தீவன உற்பத்தி மற்றும் பாதுகாப்பு குறித்த 5 நாள் மேம்பட்ட பயிற்சி அளிக்கப்பட்டது.

நிலமற்ற கால்நடை வளர்ப்பாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளின் பாரம்பரியமாக தங்கள் கால்நடைகளின் தீவனத் தேவைகளில் குறிப்பிடத்தக்க பகுதியைப் பூர்த்தி செய்வதற்காக பொதுவான மேய்ச்சல் நிலம் / மேய்க்கால் நிலத்தையே நம்பியுள்ளனர். பெரும்பாலான கிராம பொது நிலங்களும், பாரம்பரிய மேய்ச்சல் நிலங்களும் பிற வளர்ச்சி நடவடிக்கைகளுக்காக

உபயோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் மேய்ச்சல் நிலங்கள் சுருங்குவதால் மேலே குறிப்பிட்டுள்ள மேய்ச்சல் நிலங்களை சார்ந்துள்ளவர்களுக்கு தீவிர வாழ்வாதார அச்சுறுத்தல் உள்ளது. எனவே, மேய்க்கால் நிலத்தை பகுதிகளாக புதுப்பிக்க இத்துறை திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக மேய்க்கால் நிலம் மேம்படும் வகையில் மாநிலம் முழுவதும் 1000 ஏக்கர் கண்டறியப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையுடன் இணைந்து, குறைந்த சத்துள்ள புற்களுக்குப் பதிலாக அதிக மகசூல் தரும் பல்லாண்டு புல் மற்றும் பயறு வகை தீவனங்களைக் கொண்டு கால்நடைகளுக்கு வருடந்தோறும் கிடைக்கும் வகையில் பசுந்தீவன உற்பத்தி திட்டம் ரூ.167 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, அடுத்த கட்டமாக கிராம அளவில் தீவனம் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காக, பாழடைந்த மேய்க்கால் நிலத்தை

மேம்படுத்தி மீட்டெடுக்கவும், சுய உதவிக் குழுக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அதிக மகசூல் தரும் தீவன வகைகளான கலப்பின கம்பு நேப்பியரினை அதாவது வணிக முறையில் சாகுபடி செய்திட தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மாவட்டங்களில் அதாவது, கன்னியாகுமரி, கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் சேலம் ஆகியவற்றில் 1 மாவட்டத்திற்கு தலா 5 ஏக்கர் என ரூ.2.33 கோடி செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் தரும் பல்லாண்டு தீவன புல் கம்பு நேப்பியரை பயிர் செய்து அமைக்கப்படும் தீவன அலகுகள் தீவன வங்கிகள் போன்று செயல்பட்டு, தேவைப்படும் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்யப்படும். இந்தத் திட்டத்தில் பெண்கள் தீவன உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதால், பாலின சமத்துவமின்மை என்ற நிலையான வளர்ச்சி இலக்கு எண்–5, வறுமையைப் போக்குதல் என்ற நிலையான வளர்ச்சி இலக்கு

எண்-1 மற்றும் பசிப்பிணி போக்குதல் என்ற நிலையான வளர்ச்சி இலக்கு எண்-2 ஆகியவற்றிற்கு பங்களிக்கின்றனர்.

தீவனப்பயிர் சாகுபடி பரப்பளவை விரிவுபடுத்துவதற்காக இந்தத் துறையானது மாற்றுத் தீவன உற்பத்தி நுட்பங்களை ஊக்குவித்து வருகிறது. அதாவது ஆண்டு முழுவதும் சிறந்த தரமான சமச்சீர் கால்நடை தீவனத்தை வழங்குவதற்காக தோட்டம்/ பழத்தோட்டங்களில் பல்லாண்டு பயிறுவகை தீவனங்களுடன் பல்லாண்டு தீவன புற்கள்/ தானியங்களை ஊடுபயிராக பயிரிடுதல் 2022-23ஆம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கு ரூ.3000/- சாகுபடி ஊக்கத்தொகையாக மொத்தம் ரூ.60.00 இலட்சம் செலவில் 2000 ஏக்கரில் ஊடுபயிராக பயிரிடப்பட்டது. இதன் வெற்றியின் அடிப்படையில் இத்திட்டம் 2023-24 வரை நீட்டிக்கப்பட்டு 2000 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டு 2,783 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இந்தத் திட்டம் சிறு-குறு

விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதன்மூலம் வறுமையைப் போக்குதல் என்ற நிலையான வளர்ச்சி இலக்கு எண்–1 மற்றும் பசிப்பிணி போக்குதல் என்ற நிலையான வளர்ச்சி இலக்கு எண்–2 ஆகியவற்றிற்கு பங்களிக்கிறது.

இந்தத் துறையானது தீவன பாதுகாப்பிற்கு இணையாக தீவன உற்பத்தி நடவடிக்கைக்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. தீவன உற்பத்தியிலுள்ள தடைகளை கருத்தில் கொண்டு தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைக்கும் வகையில், தீவனம் விரையமாவதை தவிர்த்து கிடைக்கும் தீவனத்தை முழுமையாக பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் தீவன விரையத்தை குறைத்திடவும் பண்ணை வேலைப்பளுவினை குறைத்திடவும் ரூ.4.90 கோடி செலவில் கால்நடைகளுக்கு நறுக்கிய தீவனங்களை வழங்குவதற்காக 50% மானியத்தில் 3,000 மின்சார புல்

நறுக்கும் கருவிகள் (2HP) வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் கால்நடைகளுக்கு நறுக்கிய தீவனம் அளிக்கப்படும். தீவனத்தின் நிகர உயிரியல் மதிப்பானது பால் உற்பத்தியை அதிகரிக்கும், இதனால் விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். இதன் மூலம் வறுமையை போக்குதல் என்ற நிலையான வளர்ச்சி இலக்கு எண்–1 மற்றும் பசிப்பிணி போக்குதல் என்ற நிலையான வளர்ச்சி இலக்கு எண்–2 ஆகியவை எட்டப்படும்.

### 10.2.1 துறைசார் பண்ணைகளில் தீவன மேம்பாட்டு நடவடிக்கைகள்

இத்துறையின் உறுதியான முயற்சியின் காரணமாக கடந்த பல ஆண்டுகளாக தரமான தீவன விதை கரணைகள் விவசாயிகளிடையே உற்பத்தி செய்து பரிமாற்றம் செய்யுமளவிற்கு தாக்கம் ஏற்பட்டுள்ளது. மேலும் விவசாயிகளுக்கு பாரமரிப்பு மற்றும் பாதுகாப்பு முறைகளை விளக்கும் வகையில்

மாவட்ட கால்நடை பண்ணை செட்டிநாடு, நடுவூர் மற்றும் ஈச்சங்கோட்டை ஆகிய இடங்களில் பருவகால தீவனத்தை பாதுகாக்கவும் மற்றும் வறட்சி காலத்தில் பயன்படுத்தவும் ஒரு பேலர் அலகு நிறுவப்பட்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டில் 1440 ஏக்கர் பரப்பளவில் 18731 மெ.டன் பசுந்தீவனம் 12 துறைசார்ந்த பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், மானிய விலையில் 16.65 இலட்சம் தீவன புல் கரணைகள் தேவையான விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 10.3 கோழியின அபிவிருத்தி

### 10.3.1 கிராமப்புறங்களில் சிறிய அளவிலான (250 கோழிகள் / அலகு) நாட்டுக்கோழிப் பண்ணை அலகுகள் நிறுவுதல்

நாட்டுக்கோழி வளர்ப்பு பாரம்பரியம் சார்ந்ததும் மற்றும் விவசாயம் சார்ந்த நீடித்த நிலையான துணை வருவாய் வழங்கும் தொழிலாகவும் இருக்கிறது.

கிராமப்புற ஏழைகள் மற்றும் நலிவடைந்த பிரிவினரின் வாழ்வாதாரத்தில் இத்தொழிலின் மூலம் ஈட்டும் துணை வருமானம் முக்கியப் பங்கு வகிக்கிறது, மேலும் சத்தான கோழி முட்டை மற்றும் இறைச்சியையும் சொந்த நுகர்வுக்கு வழங்குகிறது.

கிராமப்புறங்களில் நாட்டுக்கோழி வளர்ப்பில் தொழில் முனைவோரை ஊக்குவிக்க, 2022-23 ஆம் நிதியாண்டில் ரூபாய் 180 இலட்சம் செலவில், சிறிய அளவிலான (250 கோழிகள் / அலகு) 100 நாட்டுக்கோழிப்பண்ணை அலகுகள், 50 சதவிகித மானியத்தில் அரியலூர், கடலூர், பெரம்பலூர், இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய 10 மாவட்டங்களில் நிறுவப்பட்டன. இத்திட்டத்தின் வெற்றியினைத் தொடர்ந்து, 2023- 24 ஆம் நிதியாண்டில் மீதமுள்ள 26 மாவட்டங்களில் (சென்னை (ம) நீலகிரி நீங்கலாக) சிறிய அளவிலான (250 கோழிகள் / அலகு) 100 நாட்டுக் கோழிப்பண்ணை அலகுகள்

ரூபாய் 180 இலட்சம் செலவில் 50 சதவிகித மானியத்தில் நிறுவப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ், நாட்டுக்கோழி வளர்ப்பு பண்ணைகளை நிறுவுவதற்குத் தேவையான கீழ்க்கண்டவற்றிற்கு 50 சதவீதம் மானியம் (ரூ.1,50,625) மாநில அரசால் வழங்கப்படுகிறது.

- ✓ கோழிக்கொட்டகை கட்டுமானம்
- ✓ உபகரணங்கள் வாங்குதல் (தீவனத்தட்டு மற்றும் தண்ணீர் வைக்கும் தட்டு)
- ✓ 4 மாதங்களுக்கு தேவையான தீவனம் (கோழி வளரும் வரை)

திட்டத்தின் மீதமுள்ள 50 சதவீதம் பங்களிப்பை வங்கி மூலமாகவோ (அ) தனது சொந்த ஆதாரங்கள் மூலமாகவோ பயனாளி திரட்ட வேண்டும். ஒவ்வொரு பயனாளிக்கும் 250 எண்ணிக்கையிலான 4 வார வயதுடைய நாட்டுக்கோழி குஞ்சுகள் ஒசூர், மாவட்ட கால்நடை பண்ணையிலிருந்து இலவசமாக வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், முட்டைகள், நாட்டுக்கோழிக்குஞ்சுகள், வளர்ந்த பெட்டைக் கோழிகள் மற்றும் சேவல்களை விற்பனை செய்வதன்மூலம் பயனாளிகள் ஒரு வருடத்தில் ரூ.2.31 லட்சம் வரை சம்பாதிக்கலாம்.

### 10.3.2 மாவட்ட கால்நடை பண்ணை, அபிஷேகப்பட்டியில் கோழி இனப்பெருக்க வளாகம் மற்றும் குஞ்சு பொரிப்பகம் அமைத்தல்

தென் மாவட்டங்களில் நாட்டுகோழிக் குஞ்சுகளுக்கான தேவையை பூர்த்தி செய்ய, தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 60:40 என்ற வீதத்தில் ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன், திருநெல்வேலி மாவட்டம். அபிஷேகப்பட்டி, மாவட்ட கால்நடை பண்ணையில் நாட்டுக்கோழி வளர்ப்பு பண்ணை மற்றும் குஞ்சு பொரிக்கும் பிரிவை நிறுவும் திட்டம் ரூ.942.31 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் மூலம் ஒவ்வொரு வாரமும், 10,000 குஞ்சுகள் வீதம், வருடத்திற்கு 5 லட்சம் ஒருநாள் வயதுடைய நாட்டு கோழிக்குஞ்சுகள் பொரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

**10.3.3 செட்டிநாடு, மாவட்ட கால்நடை பண்ணையில் கோழி இனப்பெருக்க வளாகம், குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை அமைத்தல்**

தமிழகத்தின் கிழக்கு மாவட்டங்களில் தூய மரபணு கொண்ட நாட்டுக்கோழிகள் விவசாயிகளுக்கு வழங்க சிவகங்கை மாவட்டம், மாவட்ட கால்நடை பண்ணையில் (செட்டிநாடு) கோழி இனப்பெருக்கம், குஞ்சு பொரிப்பான், தீவன உற்பத்தி அலகு ரூ.1381.92 இலட்சத்தில் நிறுவப்பட்டு வருகிறது.

இதன் மூலம் வருடத்திற்கு 4 இலட்சம் எண்ணிக்கையில் ஒருநாள் வயதுடைய நாட்டுக்கோழிகுஞ்சுகள் மற்றும் 2000 டன் தீவனமும் உற்பத்தி செய்யப்பட்டு கிழக்கு மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

**இயற்கை பேரிடரில் துறையின் ஈடுபாடு**

கால்நடை பராமரிப்புத் துறையானது தென் மாவட்டங்களில் ஏற்பட்ட அதிதீவிர கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை பாதுகாத்ததில் முக்கிய பங்கு வகித்தது. மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மற்றும் அதிதீவிர கனமழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களுக்கு நிவாரணப் பணிகள் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறையின் சேதமடைந்த கட்டடங்கள் ரூபாய் ஒரு கோடி நிதியில் சீரமைக்கப்பட்டது. மேலும், மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 5,812 விவசாயிகளுக்கு கறவை மாடு வாங்க ரூ.2537.40 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 10.4 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீர் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள துறைகளில் கால்நடை பராமரிப்புத் துறையும் ஒன்று. இத்திட்டத்தில் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் 34 மாவட்டங்களை உள்ளடக்கிய 47 உப வடிநிலங்களில் 6 ஆண்டுகளில் ரூ.38.94 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பால்வள ஆர்வக் குழுக்கள், கன்று மேலாண்மை, மடிவீக்க நோய் மேலாண்மை, கருவுறுதல் மற்றும் சுகாதார முகாம்கள், திட்டமிடப்பட்ட இனப்பெருக்கம், விவசாயிகளின் இருப்பிடத்திலேயே செயற்கை கருவூட்டல் மற்றும் தீவன மேம்பாடு போன்ற 4 கட்டங்களில் கால்நடை பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உப வடிநிலப்பகுதிகளில் இதுவரை,

- **3100 விவசாயிகளைக் கொண்ட 124 பால்வள ஆர்வலர் குழு** உருவாக்கப்பட்டுள்ளன.
- **33,600 கிடேரிக் கன்றுகளுக்கு** குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளது.
- **33,600 கிடேரிக் கன்றுகளுக்கு** தாது உப்பு கட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.
- **53,274 பசுக்களுக்கு** மடிவீக்க நோய் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.
- **5,376 சினையுறாதன்மை நீக்க நோய் சிகிச்சை முகாம்கள்** நடத்தப்பட்டுள்ளன.
- திட்டமிடப்பட்ட இனப்பெருக்கத்தின் கீழ் **53,760 பசுக்களுக்கு** சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.
- **9,39,961 செயற்கைமுறை கருவூட்டல்** விவசாயிகளின் இருப்பிடத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- **5,926 ஹெக்டேர்** தீவன சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்கண்ட நடவடிக்கைகளால் 3.08 இலட்சம் விவசாயிகள் பயனடைந்து, 1.64 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன. மேலும், மேற்கண்ட நடவடிக்கையின் விளைவாக திட்டப் பகுதியில் ஒரு நாளைக்கு 6.48 லட்சம் லிட்டர் கூடுதலாக அதிகரித்துள்ளது.

2024–25 ஆம் ஆண்டில், ரூ.2.24 கோடி செலவில் கால்நடை பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 10.5 கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்

சேலம் மாவட்டம் தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையமானது 1102.25 ஏக்கர் பரப்பில், ரூ.564.44 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது

### 10.5.1 குறிக்கோள்கள்

- விவசாயிகளுக்கு ஏற்ற வகையில், நிரூபிக்கப்பட்ட அறிவியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகள் நிறுவுதல்.
- மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் களத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளை அறிந்து அதற்கு தகுந்த தீர்வு நடவடிக்கைகளுக்கு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வாய்ப்புகளை உருவாக்குதல்.
- விவசாயிகள் மற்றும் கள கால்நடை மருத்துவர்களின் திறன் மேம்பாட்டுத் தேவைக்கேற்ப பல்வேறு பயிற்சிகள் வழங்குதல்.
- விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் தொழில் முனைவோருக்கு தேவைப்படும் பல்துறை சார்ந்த அறிவுரைகள் வழங்குவற்கும்,

கால்நடை உற்பத்தி பொருட்களை முறையாக சந்தைப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமைதல்.

- கால்நடை மற்றும் விலங்கு அறிவியலுக்கான மேம்பட்ட மையத்தை நிறுவுதல்.

இந்நிலையம் உலக புகழ்பெற்ற நிறுவனமாக உருவாக்க முன்மொழியப்பட்டு, கல்வி, திறன் மேம்பாடு மற்றும் கால்நடை துறை விரிவாக்கத்திற்கான தொழில் முனைவோர் ஊக்குவிப்பு அனைத்தும் ஒரே குடையின் கீழ் உள்ளன. இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள, பின்வரும் வசதிகள் அமைக்கப்பட்டு வருகிறது:

1. **கால்நடைப் பண்ணை வளாகம்–** இவ்வளாகத்தில் உள்நாட்டு மாட்டினப் பிரிவு, செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினப் பிரிவு, பன்றிப் பிரிவு, உள்நாட்டு நாயினப் பிரிவு, கால்நடை தனிமைப்படுத்தும் பிரிவு, கால்நடை மருத்துவமனை, ஆய்வகம் மற்றும் கோழியினப் பிரிவுகள் இடம்பெறும்.

2. மீன்வள செயல்முறை வளாகம்– இவ்வளாகத்தில் தீவிரமுறையில் காற்றுப் புகுத்திகளைப் பயன்படுத்தி மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதி, நவீன மீன் விற்பனையகம், மீன் வளர்ப்புடன் கூடிய நீர்த் தாவர வளர்ப்பு பிரிவு மற்றும் அலங்கார மீன்வளர்ப்பு பிரிவு ஆகியவை அமைக்கப்பட்டு செயல்படுகிறது.

3. முதுநிலைக் கல்வி/ பட்ட மேற்படிப்பு வளாகம்– இவ்வளாகத்தில் நிர்வாகக் கட்டடம், கல்வி வகுப்பறை கட்டடங்கள் மற்றும் ஆய்வகங்கள், ஆசிரியர் அறைகள், விடுதிகள் மற்றும் பணியாளர்களின் குடியிருப்புகள் உள்ளன.

4. விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகம்– இவ்வளாகத்தில் விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சி மையம், உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் புனைதல் மையம், கால்நடைபண்ணை மாதிரி அலகுகள், ஒருங்கிணைந்த பண்ணை அமைப்புகள்,

மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கான விடுதிகள் உள்ளன.

5. **ஆராய்ச்சி வளாகம்–** கால்நடை இனப்பெருக்கம் மற்றும் தொழில் நுட்பப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி பிரிவுகள் உள்ளன.

6. **தொழில் உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வளாகம்–** தொழில் உருவாக்க மையமும், தொழில் ஒருங்கிணைப்பு மையமும் இடம்பெற்றுள்ளன.

7. **இறைச்சி உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வளாகம்–** செம்மறியாடு, வெள்ளாடு, கோழி மற்றும் பன்றியினங்களுக்கென தனித்துவமான வசதிகள் இடம்பெற்றுள்ளன.

8. **பசுந்தீவன ஆராய்ச்சி மண்டலம் –** இத்தீவன ஆராய்ச்சி வளாகத்தில் தீவனப்பயிர் உற்பத்தி, மரவகை தீவனப்பயிர்களுடன் கூடிய மேய்ச்சல் நிலம், உலர் தீவன உற்பத்தி, ஊறுகாய்ப்புல் உற்பத்தி மற்றும் தீவன விதை உற்பத்தி

ஆகியவற்றிற்கான பரப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக 25 ஏக்கர் நிலத்தில் கோ.எப்.எஸ்.29 தீவனப்பயிர் பயிரிடப்பட்டு உதகை மாவட்ட கால்நடை பண்ணைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

9. **பொதுமக்கள் கலந்துரையாடும் பகுதி–** இப்பகுதியில் குழந்தைகள் பூங்கா, கால்நடை அறிவியல் மற்றும் தொடர்புடைய துறைகளில் பொதுமக்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்தும் அரங்கு, வாகன நிறுத்தம், ஓய்வு அறைகள், சில்லறை அங்காடி, வங்கிகள் மற்றும் தானியங்கி பணம் வழங்கும் மையம் ஆகியவை உள்ளன.

இந்நிறுவனத்திற்கு அனைத்து கட்டடப் பணிகளும் கீழ்க்கண்ட துறைகள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. பொதுப்பணித் துறை

அ) திறன் மேம்பாட்டு வளாகம் ஆ) ஆராய்ச்சி வளாகம் இ) தொழில் உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வளாகம் ஈ) இறைச்சி உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வளாகம் உ) முதுநிலைக் கல்வி வளாகம் மற்றும் கால்நடைப் பண்ணை வளாகத்தில் உள்ள கோழியினப் பிரிவுகள் ஊ) ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தின் நிர்வாக அலுவலகம், பொதுமக்கள் கலந்தாலோசிக்கும் பிரிவு, முக்கிய விருந்தினர் இல்லம் மற்றும் நுழைவு வாயில் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் பொதுப் பணித்துறை மூலம் நிறைவடைந்துள்ளன. பொது மக்களுக்கான வசதி, குறைந்த மற்றும் உயர் மின்னழுத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. **கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம்**

அ) உள்நாட்டு மாட்டினப் பிரிவு ஆ) செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினப் பிரிவு இ) உள்நாட்டு நாயினப்பிரிவு ஈ) தொற்று தடை காப்புப் பிரிவு உ) கால்நடை தனிமைப்படுத்தும் பிரிவு ஊ) கால்நடைப் பண்ணை மருத்துவமனை எ) ஆய்வகம் ஏ) பன்றிப் பிரிவு ஐ) கோழியினப் பிரிவு (பொரிப்பகம் மற்றும் தீவனப் பிரிவு) ஆகியவை அடங்கிய கால்நடைப் பண்ணை வாளகம். திறன் மேம்பாட்டு வளாகத்தில் அமையவிருக்கும் உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் புனைதல் (fabrication) மையம், ஒருங்கிணைந்த பண்ணை அமைப்புகள் ஆகியவற்றின் பணிகள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் கட்டிடப் பணிகள் முடிவுற்று மின் இணைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

## 3. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மூலம் 7.52 ஏக்கர் பரப்பளவில் 110/22 Kv துணை மின் நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

## 4. வேளாண் பொறியியல் துறை

அ) மேற்குத் தொகுதி 6–ல் முதல் கட்டமாக 16,000 மீட்டர் நீளத்திற்கு நெகிழி (plastic) குழாய்கள் மூலம் தீவன சாகுபடிக்கு நுண்ணீர் பாசனப் பணிகள் நிறைவடைந்துள்ளன. ஆ) 389 நீர் தெளிப்பபான்கள் ஒரு உந்தி நிலையத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. இ) வேளாண் பொறியியல் துறையின் மூலம் நுண்ணீர் பாசனம் நிறுவப்பட்ட பகுதியில் நில மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஈ) மானாவாரி நில மேம்பாட்டுப் பகுதி கிழக்குத் தொகுதியில் தீவனப் பயிரிடும் பணி நடைபெற்று வருகிறது

5. **தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்**

குடிநீர் திட்டத்தில் கீழ்க்காணும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன:

- கூடக்கல்லில் தலைமைப் பணி
- சித்தூரில் நீர் சுத்திகரிப்பு நிலையம்

1) மூன்று பூஸ்டர் நிலையங்கள் –

i) கண்டர்குலமாணிக்கம்

ii) பள்ளித்தெருப்பட்டி

iii) குறள்நாதம்

2) கமலாப்பட்டியில் ரிட்ஜ் கீழ்நிலை தொட்டிகள்

3) மூன்று பிரேக் பிரஷர் நீர்நிலை தொட்டிகள் –

i) ஈஸ்வரமூர்த்திபாளையம்

ii) கல்லுடசங்குன்று

iii) மல்லியக்கரை

4) நான்கு முதன்மை சேவை நீர்த்தேக்கங்கள் – கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலைய

வளாகத்திற்குள் 25 இலட்சம் லிட்டர் திறன் கொண்டவை 2 எண்ணிக்கையிலும் மற்றும் 10 இலட்சம் லிட்டர் திறன் கொண்டவை 2 எண்ணிக்கையிலும் உள்ளன.

சேலம் மாவட்டம் கூடக்கல் கிராமத்தில் காவிரி ஆற்றில் இருந்து மேற்பரப்பு நீர் எடுக்கப்பட்டு மேற்கண்ட வசதிகள் வழியாக 156 கிமீ நீளமுள்ள குழாய்கள் மூலம் திட்டத்திற்கு வழங்கப்படும். 01.02.2022 முதல் தண்ணீர் விநியோகம் தொடங்கியுள்ளது.

6. **மீன் வளத்துறை மற்றும் தமிழ்நாடு ஜெயலலிதா மீன்வளபல்கலைக்கழகம்**

அ)தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் இந்நிலையத்தில் தீவிர மீன் குஞ்சு வளர்ப்புப் பிரிவு செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆ)தமிழ்நாடு ஜெயலலிதா மீன்வளபல்கலைக்கழகம் மூலம் ஒருங்கிணைந்த மீன் பண்ணை மற்றும் அலங்கார மீன் வளர்ப்பகம் ஆகியவை அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 11. கால்நடை நிலையங்களின் உட்கட்டமைப்பு

கால்நடை மருத்துவ நிலையங்கள் நோயுற்ற கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கும் மையங்களாகவும், அறிவுசார் மையங்களாகவும் மற்றும் விரிவாக்க மையங்களாகவும் உருமாறியுள்ளன. துறையினால் வழங்கப்படும் எந்த ஒரு சேவையையும் அருகிலுள்ள கால்நடை மருத்துவ நிலையத்தில் விவசாயிகள் பெற்றுக் கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதனால், அனைத்து கால்நடை மருத்துவ நிலையங்களுக்கும் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகிறது. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சிறந்த கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதன் வாயிலாக, கால்நடை உற்பத்தித் திறன் அதிகரிக்கும். ஊரக மேம்பாட்டை முதன்மை நோக்கமாகக் கொண்டு, மாநில அரசின் நிதி, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி

(RIDF XXV, XXVII, XXVIII), ஒன்றிய அரசின் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், கால்நடை மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் திட்டம் மூலம் துறையின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**அட்டவணை 9: உட்கட்டமைப்பு பணிக்கான திட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கட்டடங் களின் எண்ணிக்கை | மொத்த ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | மாநில நிதி | 35 | 62.82 |
| 2 | கால்நடை மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் திட்டம் | 256 | 25.51 |
| 3 | தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் | 100 | 28.66 |
| 4 | நபார்டு XXV (2019–2020) | 102 | 43.30 |
| 5 | நபார்டு XXVII(2021–2022) | 88 | 57.46 |
| 6 | நபார்டு XXVIII(2022–2023) | 37 | 25.00 |
| மொத்தம் | | 618 | 242.75 |

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.02.2024 அன்று கால்நடை பராமரிப்பு துறை சார்பில் ரூ.3.00 கோடி செலவில் சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவமனை, ரூ.11.14 கோடி செலவில் மண்டல இணை இயக்குநர், உதவி இயக்குநர், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு அலுவலக கட்டிடங்கள் மற்றும் கால்நடை மருந்தக கட்டிடங்களை திறந்து வைத்தார்.

நபார்டு RIDF XXIX திட்டத்தின் கீழ் ரூபாய் 16.30 கோடி செலவில் 25 கால்நடை நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

50 கால்நடை மருத்துவ நிலையங்களின் நோய் கண்டறியும் உள்கட்டமைப்பை வலுப்படுத்த ரூ.20.00 கோடி செலவில் கையடக்க அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனர்கள் மற்றும் ஊடுகதிர் அலகுகள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 12. கால்நடை கணக்கெடுப்பு மற்றும் மாதிரி வரைவுத் திட்டம்

### 12.1 கால்நடைக் கணக்கெடுப்பு

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கால்நடை கணக்கெடுப்பு நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. இது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஆற்ற வேண்டிய பல்வேறு பணிகளை உள்ளடக்கியது. முதல் கால்நடை கணக்கெடுப்புப் பணி 1919-20 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. சமீபத்திய 20வது கால்நடை கணக்கெடுப்பு 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. கால்நடை கணக்கெடுப்பு 100% மத்திய அரசால் நிதியளிக்கப்படுகிறது. 21வது கால்நடை கணக்கெடுப்பு பணி 2024-25 ஆம் ஆண்டில் நடத்தப்படும்.

### அட்டவணை 10: அனைத்து இந்திய 20வது கால்நடை கணக்கெடுப்பு விவரங்கள் மற்றும் அதனில் தமிழ்நாட்டின் பகிர்வு

| வ. எண் | இனங்கள் | அனைத்து இந்தியாவின் 20வது கால்நடை கணக்கெடுப்பு விவரம் | தமிழ்நாட்டின் 20வது கால்நடை கணக்கெடுப்பு |
|---|---|---|---|
| 1 | அயலின/கலப்பின பசுவினம் | 51356405 | 7724719 |
| | நாட்டின பசுவினம் | 142106466 | 1793941 |
| | **மொத்த பசுவினம்** | **193462871** | **9518660** |
| 2 | எருமையினம் | 109851678 | 518795 |
| 3 | மிதுன் | 386305 | 0 |
| 4 | யாக் | 57570 | 0 |
| | **மொத்த பசு மற்றும் எருமையினங்கள்** | **303758424** | **10037455** |
| 5 | அயலின/கலப்பின செம்மறியாடுகள் | 4088133 | 277650 |
| | நாட்டினசெம்மறியாடுகள் | 70172482 | 4222841 |
| | **மொத்தசெம்மறியாடுகள்** | **74260615** | **4500491** |
| 6 | வெள்ளாடுகள் | 148884786 | 9888746 |
| 7 | குதிரைகள் மற்றும் மட்ட குதிரைகள் | 342226 | 5417 |

| வ. எண் | இனங்கள் | அனைத்து இந்தியாவின் 20வது கால்நடை கணக்கெடுப்பு விவரம் | தமிழ்நாட்டின் 20வது கால்நடை கணக்கெடுப்பு |
|---|---|---|---|
| 8 | கழுதைகள் | 123587 | 1428 |
| 9 | கோவேறு கழுதைகள் | 84261 | 305 |
| 10 | ஒட்டகங்கள் | 251956 | 7 |
| 11 | அயலின/கலப்பின பன்றிகள் | 1896944 | 17106 |
| | நாட்டின பன்றிகள் | 7158544 | 49666 |
| | மொத்த பன்றிகள் | 9055488 | 66772 |
| | **மொத்த கால்நடைகள்** | **536761343** | **24500621** |
| 12 | நாய்கள் | 9434039 | 1296655 |
| 13 | முயல்கள் | 549941 | 26513 |
| 14 | புழக்கடை கோழியினங்கள் | 317073357 | 21264570 |
| | பண்ணை கோழியினங்கள் | 534736574 | 99516530 |
| | **மொத்த கோழியினங்கள்** | **851809931** | **120781100** |

20–வது ஐந்தாண்டு கால்நடை கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ்நாடு, தேசிய அளவில் கோழியின எண்ணிக்கையில் 1–வது இடத்திலும், செம்மறியாட்டின எண்ணிக்கையில் 4–வது

இடத்திலும், வெள்ளாட்டின எண்ணிக்கையில் 7–வது இடத்திலும், பசுவின எண்ணிக்கையில் 13–வது இடத்திலும், எருமையின எண்ணிக்கையில் 14–வது இடத்திலும் உள்ளது.

## 12.2 ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம்

வருடாந்திர மாதிரி ஆய்வானது கடந்த 1977–78 முதல் "ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம்" என்ற ஒன்றிய அரசின் நிதி பங்களிப்பு திட்டத்தின்கீழ் 50 விழுக்காடு மத்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசின் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் வழிகாட்டுதலின்படி பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி ஆகியவற்றின் உற்பத்தி மதிப்பீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் ஒரு ஆண்டானது கோடைக்காலம், மழைக்காலம் மற்றும் குளிர்காலம் என மூன்று பருவங்களாகப் பிரிக்கப்பட்டு, பருவ

வேறுபாடுகளால் ஏற்படும் உற்பத்தி மாற்றங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன.

கால்நடை வளர்ப்போரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, பல்வேறு திட்டங்களை வகுக்கவும், மேற்பார்வையிடவும் மற்றும் மதிப்பாய்வு செய்யவும் அவற்றின் விளைவுகளால் ஏற்படும் தாக்கத்தைக் கணக்கிடவும் மாதிரி வரைவுத் திட்டத்தின் மூலம் பெறப்படும் புள்ளி விவரங்கள் பயன்படுகின்றன.

**அட்டவணை 11: பருவம் வாரியாக கால்நடை பொருட்கள் உற்பத்தி மதிப்பீடு 2022-23**

| இனம் | கோடைக்காலம் (மார்ச் முதல் ஜூன் வரை) | மழைக் காலம் (ஜூலை முதல் அக்டோபர் வரை) | குளிர்காலம் (நவம்பர் முதல் பிப்ரவரி வரை) | மொத்தம் 2022-23 |
|---|---|---|---|---|
| பால் (இலட்சம் மெட்ரிக் டன்களில்) | 33.70 | 34.96 | 34.51 | 103.17 |
| முட்டை (மில்லியன் எண்களில்) | 6891.38 | 7212.91 | 7456.37 | 21560.66 |
| இறைச்சி (ஆயிரம் டன்களில்) | 237.77 | 230.11 | 236.50 | 704.38 |

## 13. ஜல்லிக்கட்டு –தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சார அடையாளம்

ஜல்லிக்கட்டு, தமிழ்நாட்டி கிராமப்புற மக்களிடையே நடத்தப்படுகின்ற 5,000 ஆண்டுகள் பழமையான பாரம்பரியம் மிக்க கலாச்சார நிகழ்வாகும். இது தமிழ்நாட்டின் சமூக–கலாச்சார நெறிமுறைகளுடன் தொடர்புடைய வரலாற்றைக் கொண்டுள்ளது.

பிராணிகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) சட்டம், 2017–இன்படி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் மே மாதம் வரை ஜல்லிக்கட்டு / மஞ்சுவிரட்டு, / வடமாடு / எருதுவிடும் விழா நிகழ்ச்சிகள் நடத்த மாநில அரசிதழில் அறிவிக்கை செய்யப்படுகின்றன. மேற்படி நிகழ்ச்சிகள் தமிழ்நாடு பிராணிகள் வதை

தடுப்பு (ஜல்லிக்கட்டு நடத்துதல்) விதிகள் 2017ன் படி நடத்தப்பட வேண்டும்.

ஜல்லிக்கட்டு / மஞ்சுவிரட்டு / வடமாடு / எருது விடும் விழா ஆகிய நிகழ்வுகளை நடத்துவதற்கு பிரத்தியேகமாக நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் அரசால் வகுக்கப்பட்டு, காளைகள் எந்தவித துன்புறுத்தல்களுக்கும் ஆளாகாமல் இருக்க, நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை அமல்படுத்த மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 2017 முதல், ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 350 ஜல்லிக்கட்டு / மஞ்சுவிரட்டு / வடமாடு / எருதுவிடும் விழா நிகழ்வுகள் நடத்த அரசால் அறிவிக்கை செய்யப்படுகின்றன.

இந்த ஆண்டில், ஜல்லிக்கட்டு / மஞ்சுவிரட்டு / வடமாடு / எருதுவிடும் நிகழ்வுகளுக்கான காளைகளை அடையாளம் காணவும், பதிவு செய்யவும் இணைய முகப்பு (www.jallikattu.tn.gov.in) புதிதாக உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. ஜல்லிக்கட்டு / மஞ்சுவிரட்டு / வடமாடு / எருது விடும் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாட்டாளர்களால் இணைய முகப்பு மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரையின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, 2024 ஜனவரி முதல் மே வரை 214 நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அதில் 197 நிகழ்வுகளுக்கு இணைய முகப்பு மூலமாகவும், 17 நிகழ்வுகளுக்கு நேரடியாகவும் அனுமதி வழங்கப்பட்டது.

## 14. பிராணிகள் நலம் காக்கும் நடவடிக்கைகள்

### 14.1 தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் செயல்பாடுகள்

இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 51(A)(g), அனைத்து உயிரினங்களிடமும் பற்றுதலுடனும், மனிதாபிமானத்துடனும் நடத்தப்படுவதை உறுதி செய்ய வழிகாட்டுகிறது. இந்த அரசியலமைப்பு விதி, பிராணிகள் மீதான சமூகத்தின் தார்மீக மற்றும் நெறிமுறை பொறுப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது மற்றும் அவற்றின் உள்ளார்ந்த மதிப்பு மற்றும் நலன்களின் அங்கீகாரத்தை பிரதிபலிக்கிறது.

தமிழகத்தில் பிராணிகள் நலப் பிரச்சினைகளைத் தீர்க்க தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தை மறுசீரமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அவ்வாறு செய்வதன் மூலம், பிராணிகளை இரக்கத்துடன் நடத்துவது மற்றும் அவற்றின் நலனை உறுதிப்படுத்துவது போன்ற அரசியலமைப்பு உத்தரவை நிலைநிறுத்துவதற்காக

அதன் உறுதிப்பாட்டை அரசாங்கம் வெளிப்படுத்துகிறது.

தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும் உள்ளனர். மாநிலத்தில் பிராணிகள் நலன் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை வாரியம் திறம்பட நிவர்த்தி செய்வதை உறுதி செய்வதற்குத் தேவையான வழிகாட்டுதலையும் ஆதரவையும் அவர்களின் தலைமை வழங்கி வருகிறது.

கூடுதலாக, தலைமைச் செயலாளர், சம்பந்தப்பட்ட துறைகளின் முதன்மைச் செயலாளர்கள், ஆணையர்கள் / சம்பந்தப்பட்ட துறைகளின் இயக்குநர்கள், பதிவாளர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் குழுவின் அமைப்பை மேலும் வலுப்படுத்துகிறார்கள். தமிழ்நாடு பிராணிகள்

நல வாரியம் மாநிலம் முழுவதும் உள்ள பிராணிகளின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும் கொள்கைகள், முன்முயற்சிகள் மற்றும் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதில் சிறந்த நிலையில் உள்ளது.

2023–24 ஆம் ஆண்டில், தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தை வலுப்படுத்தவும், மாநிலத்தில் பிராணிகள் கருத்தடை வசதிகளை மேம்படுத்தவும் ரூ.9.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024–25 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிவிப்பின் போது ரூ.11.115 கோடி ஒதுக்கப்பட்டது.

**14.1.1 "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்"**

தமிழ்நாடு அரசு 2022–23 நிதிநிலை அறிக்கையின் போது, அனைத்து உயிரினங்களின் மீதும் ஆழ்ந்த கருணை கொண்ட புனித வள்ளலாரின் 200–வது பிறந்தநாளை நினைவுகூரும் விதமாக "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" திட்டம்

அறிவிக்கப்பட்டது. அரசாங்கத்தின் பாராட்டத்தக்க முயற்சியை இத்திட்டம் பிரதிபலிக்கிறது. கைவிடப்பட்ட, காயமடைந்த பிராணிகளை பராமரிக்கும் அரசு சாரா நிறுவனங்களை ஆதரிப்பதில் இத்திட்டத்தின் கவனம் வள்ளலாரின் உலகளாவிய கருணை மற்றும் பச்சாதாபத்தின் தத்துவமான "வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ற கொள்கையுடன் ஒத்துப்போகிறது.

2022-23 ஆம் ஆண்டில் ஒதுக்கீடான ரூ.20.00 கோடி நிதியானது பாதிக்கப்படக்கூடிய கால்நடைகளுக்கு தங்குமிடம், மருத்துவ சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வழங்குவதற்கான அரசு சாரா நிறுவனங்களின் திறனை கணிசமாக மேம்படுத்துகிறது.

இத்திட்டத்தில் பின்வரும் செயல்பாடுகளுக்கு நிதி ஆதரவளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

1) ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட, காயமடைந்த தெருவில் சுற்றி திரியும் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளுக்கு உணவு மற்றும் மருத்துவ சிகிச்சை அளித்தல்.

2) காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக பிராணிகள் துயர் துடைப்பு சங்கங்கள் / கால்நடை நல அமைப்புகள் / அரசு சாரா நிறுவனங்களுக்கு மருத்துவ அவசர சிகிச்சை ஊர்தி கொள்முதல் செய்தல்.

3) விலங்குகளுக்கு உறைவிடம் கட்டுவது உட்பட கட்டமைப்பு வசதிகளை அறிவியல் பூர்வமான அடிப்படையில் 'வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்' என்ற பெயரில் வழங்குதல்.

4) ஆதரவற்ற மற்றும் வளர்ப்பு நாய், பூனைகளுக்கு இனவிருத்தி கட்டுப்பாடு செய்தல் மற்றும் தடுப்பூசி போடுதல்.

29 பிராணிகள் நல அமைப்புகள் / அரசு சாரா தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வரும் கால்நடைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி வழங்கிடவும், உறைவிடம் மற்றும் அவசர ஊர்தி சேவைக்காகவும் ரூ.6.18 கோடி நிதி உதவி வழங்கப்பட்டது.

2024–25 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டத்தை செயல்படுத்த ரூ.15.00 கோடி வழங்கப்பட்டது.

### 14.2 பிராணிகள் வதைத் தடுப்பு சங்கம்

அனைத்து மாவட்டங்களிலும் பிராணிகள் துயர் துடைப்பு சங்கங்கள் தோற்றுவிக்கப்படுதல் மற்றும் முறைப்படுத்துதலானது விலங்குகள் வதைத் தடுப்புச்

சட்டம் 1960, பிரிவு 38, உட்பிரிவு 1–ன்கீழ், (59 of 1960) ஒன்றிய அரசிதழில் வெளியிடப்பட்ட மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் சுற்றறிக்கை எண்.S.O.271(E), நாள்.26.03.2001–ன்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட பிராணிகள் துயர் துடைப்பு சங்கங்கள் அவர்களின் அதிகார வரம்புகளுக்குள் உள்ள விலங்குகளின் உரிமைகள், சுதந்திரம் மற்றும் நலனைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாவட்ட ஆட்சியர் தலைமையில், இந்த அமைப்புகள் விலங்குகள் நலனை மேம்படுத்துதல் மற்றும் கொடுமையைத் தடுக்கும் நோக்கில் பல முக்கியப் பொறுப்புகளைக் கொண்டுள்ளன.

மாவட்ட பிராணிகள் துயர் துடைப்பு சங்கங்களின் செயல்பாடுகள் மாவட்ட நிர்வாகக் குழுவால் மேற்பார்வையிடப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன, இது முயற்சிகளை ஒருங்கிணைக்கவும், வளங்களை ஒதுக்கீடு செய்யவும் மற்றும் மாவட்டத்திற்குள் உள்ள

விலங்கு நல முயற்சிகளின் செயல்திறனை மதிப்பீடு செய்யவும் உதவுகிறது. கூட்டு முயற்சிகள் மற்றும் செயலூக்கமான நடவடிக்கைகள் மூலம், மாவட்ட பிராணிகள் துயர் துடைப்பு சங்கங்கள் அனைத்து விலங்குகளின் நல்வாழ்வையும் மதிக்கும், பாதுகாக்கும் மிகவும் இரக்கமுள்ள மற்றும் பொறுப்பான சமூகத்தை உருவாக்க முயற்சி செய்கின்றன.

- விலங்கு உரிமைகள் மற்றும் நலனை உறுதி செய்தல்
- விலங்குகளுக்கு ஏற்படும் கொடுமையை நிவர்த்தி செய்தல்
- துணைச் சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குதல்
- மருத்துவமனைகள் மற்றும் விலங்குகள் தங்குமிடங்களை அமைத்தல் மற்றும் கண்காணித்தல்

## 14.3 பிராணிகள் இனவிருத்தி கட்டுப்பாடு திட்டம்

ஆதரவற்ற நாய்கள் அபரிமிதமாகப் பெருகுவதைத் தடுப்பதற்காகவும், வெறிநாய்க்கடி நோய் நிகழ்வுகளைக் குறைப்பதற்காகவுமே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தெருநாய்களின் எண்ணிக்கையை நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டுப்படுத்துவதற்கு, மத்திய அரசு பிராணிகள் கருத்தடை விதி, 2023 ஐ வகுத்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ஆதரவற்ற நாய்களை மனிதாபிமான முறையில் பிடித்து, கருத்தடை செய்து, வெறிநோய் தடுப்பூசி செலுத்தி, அவை பிடித்து வரப்பட்ட பகுதிகளிலேயே மறுபடியும் விடப்படுகின்றன.

அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சிகளின் திட்ட அங்கீகரிப்பு சான்றிதழ், இந்திய பிராணிகள் நலவாரியத்தின் வழியாக வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2024–25 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிவிப்பின் போது, நாய்களுக்கான கருத்தடை திட்டத்தை வலுப்படுத்தவும், தமிழகம் முழுவதும் நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை மையங்கள் திறம்பட செயல்படுவதை உறுதி செய்யவும் ரூ.20.00 கோடி ஒதுக்கப்பட்டது.

### 14.4 செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்களை பதிவு செய்தல்

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தின்படி, 06.09.2018 தேதியிட்ட G.S.R 844 (இ) அறிவிப்பு மற்றும் விலங்குகள் வதை தடுப்பு (செல்லப்பிராணி கடை) விதிகள், 2018 ஆகியவற்றின் கீழ், செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்களை ஒழுங்குபடுத்துவது செல்லப் பிராணிகளாக விற்கப்பட்டு வளர்க்கப்படும் விலங்குகளின் நல்வாழ்வு மற்றும் நலனை உறுதி செய்வதற்கான இன்றியமையாத படியாகும். விதிமுறைகள்

இல்லாமல், இந்த நிறுவனங்களில் விலங்குகள் தவறாக பயன்படுத்துதல், புறக்கணிப்பு மற்றும் தவறாக கையாளப்படும் அபாயம் உள்ளது.

செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்கள், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பிறகு, உறுதிமொழிப் பத்திரத்துடன் ரூ.5000/-ஐ (திருப்பிச் செலுத்தப்படமாட்டாத தொகை) செலுத்தி மாநில பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்தல் இந்த நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணித்து ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு நெறிமுறையாக செயல்படுகிறது.

தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் செய்திக்குறிப்பு மூலம் செல்லப்பிராணிகள் விற்பனை நிலைய உரிமையாளர்களை வாரியத்தில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டு, இதுவரை 450 செல்லப்பிராணிகள், விற்பனை நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 15. தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

பால் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க பசு மற்றும் எருமை வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமை 2002–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

### 15.1 முகமையின் முதன்மை நோக்கம்

இனப்பெருக்க வயதிலுள்ள அனைத்து பசு மற்றும் எருமைகளை வரையறுக்கப்பட்ட இனப்பெருக்கத்தின் கீழ் கொண்டு வருவதன் மூலம் அவைகளின் பால் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதே இம்முகமையின் முதன்மை நோக்கமாகும்.

### 15.2 செயல்படுத்தப்படும் திட்டங்கள்

தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமை ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் மற்றும் தேசிய கால்நடை இயக்கம் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**15.3 ராஷ்ட்ரிய கோகுல் மிஷனின் செயல்பாடுகள்**

ஒன்றிய அரசின் 100% நிதியுதவியுடன் கூடிய ராஷ்ட்ரிய கோகுல் மிஷனின் கீழ் கூடுதல் நிதியைப் பெற சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, தொடர் முயற்சியின் பயனாக 2022-23ல் ரூ.33.47 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு 2023-24-ல் ரூ.109.96 கோடியாக உயர்த்தப்பட்டது. அதாவது மூன்று மடங்கு உயர்ந்துள்ளது.

**15.3.1 உறைவிந்து உற்பத்தி நிலையங்கள்**

கிருஷ்ணகிரி மாவட்ட ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் உள்ள உறைவிந்து உற்பத்தி நிலையத்தை பலப்படுத்த புதிய விந்து பதப்படுத்தும் வசதி ஏற்படுத்தும் பணிகள் ரூ.9.75 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையை வலுப்படுத்த புதிய விந்து சேகரிப்பு முற்றம், உறைந்த விந்து விநியோக மையம், காளைகளை கழுவுதல் மற்றும் காத்திருப்பு பகுதி,

கண்ணாடி பொருட்கள் கிருமி நீக்கம் செய்யும் அறை மற்றும் சேகரிப்பு முற்றத்திற்கு தடுப்புச் சுவர் கட்டுதல், கட்டிடங்களுக்கு சிறப்பு பழுதுநீக்க பணிகள் மற்றும் உயிர் பாதுகாப்பு வசதிகள், வேலி அமைக்கும் பணிகள் ரூ.6.00 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**15.3.2 உயர் மரபணுத்திறன் கொண்ட காளைகள்**

ராஷ்ட்ரிய கோகுல் மிஷனின் கீழ் ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணைக்கு 32 கலப்பின ஜெர்சி உயர் மரபணு தகுதி காளைகள் வாங்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையில் உள்ள அயலின கால்நடை பெருக்குப் பண்ணைக்கு 46 கலப்பின ஜெர்சி மற்றும் 5 சாஹிவால் உயர் மரபணு தகுதியுள்ள காளைகள் வாங்கப்பட்டுள்ளன, உதகையில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணைக்கு 17 கலப்பின ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் மற்றும் 9 கலப்பின ஜெர்சி உயர் மரபணு தகுதி காளைகள் வாங்கப்பட்டுள்ளன.

கலப்பின ஜெர்சிகள் செயல்திறன் பதிவு திட்டத்தின் கீழ், ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணைக்கு 5 கலப்பின ஜெர்சி காளை கன்றுகளும், ஈச்சங்கோட்டையில் உள்ள அயலின கால்நடை இனபெருக்கப் பண்ணைக்கு 20 கலப்பின ஜெர்சி காளை கன்றுகளும், உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணைக்கு 12 கலப்பின ஜெர்சி காளை கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

### 15.3.3 உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் சேமிப்பு மற்றும் விநியோகம்

ஈரோடு, கரூர், மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ள கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகளில், உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் சேமிப்பு மற்றும் விநியோகத்திற்கான குடிமை கட்டமைப்புகளை ரூ.3.50 கோடி செலவில் வலுப்படுத்தும் பணிகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 15.3.4 உள்நாட்டினங்களின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு

உம்பளச்சேரி மாட்டினத்தை பாதுகாப்பதற்காக திருவாரூர் கால்நடை பண்ணையில், 3 மாட்டு தொழுவங்கள், ஒரு கறவை மாட்டு கொட்டகை, வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி ரூ.2.14 கோடியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 15.3.5 பயிற்சி மையம்

நடுவூரில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் பணியாளர்களுக்கான பயிற்சி மையத்தைப் பலப்படுத்தும் பணிகள் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 15.3.6 மனித வள மேம்பாடு

மாட்டுப்பட்டியில் உள்ள கேரள கால்நடை மேம்பாட்டு வாரியத்தின் பயிற்சி மையத்தில் இத்துறையின் பண்ணைகளில் பணிபுரியும் மொத்தம்

13 கால்நடை மருத்துவர்களுக்கு மாடுகளின் கருவுறுதல் பிரச்சனைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மாட்டுப்பட்டியில் உள்ள கேரள கால்நடை மேம்பாட்டு வாரியத்தின் பயிற்சி மையத்தில், உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பணிபுரியும் 7 கால்நடை மருத்துவர்களுக்கு, உறை விந்து உற்பத்தியில் நவீன போக்குகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மாவட்ட கால்நடை பண்ணை, ஓசூர் மற்றும் நடுவூர் ஆகிய பயிற்சி மையங்களில் மொத்தம் 200 கால்நடை ஆய்வாளர்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் குறித்த புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**15.3.7 பாலினம் பிரிக்கப்பட்ட விந்து உற்பத்தி வசதி**

உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் ரூ 47.50 கோடி மதிப்பீட்டில் மூன்று

ஆண்டுகளில் 7.20 லட்சம் பாலினம் பிரிக்கப்பட்ட விந்து உற்பத்தி செய்ய, பாலினம் பிரிக்க வசதிகள் எற்படுத்தபட்டுள்ளது. இதுவரை 3,09,735 உறைவிந்து தயாரிக்கப்பட்டு, கோயம்புத்தூர், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், ராணிப்பேட்டை, தஞ்சாவூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பத்தூர், தூத்துக்குடி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் பாலினம் பிரிக்கபட்ட விந்து கொண்டு செயற்கைமுறை கருவூட்டல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாலினம் பிரிக்கப்பட்ட விந்து கொண்டு மொத்தம் 6766 செயற்கைமுறை கருவூட்டல்கள் பதிவாகியுள்ளன.

**15.3.8 ஆய்வுக்கூட கருத்தரித்தல் மற்றும் கருமாற்றத் தொழில்நுட்பம்**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் ரூ.4.55 கோடியில் ஆய்வுக்கூட கருத்தரித்தல் மற்றும் கரு மாற்றும்

திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மொத்தம் 83 கன்றுகள் (சிவப்பு சிந்தி –66, காங்கேயம்–14 மற்றும் புலிகுளம் –3) உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ஆய்வுக்கூட கருத்தரித்தல் ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. ஆய்வுக்கூட கருத்தரித்தல் திட்டத்தின் கீழ் 81 கருக்கள் உற்பத்தி செய்யப்பட்டு, 61 கருக்கள் மாற்றப்பட்டு 11 பசுக்கள் கருவுற்றுள்ளன.

### 15.3.9 நாடு தழுவிய செயற்கைமுறை கருவூட்டல் திட்டம்

திருவண்ணாமலை, விருதுநகர், விழுப்புரம், சென்னை, கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, சேலம், நீலகிரி மற்றும் திருவள்ளூர் ஆகிய 13 மாவட்டங்களில், இனப்பெருக்க வயதுடைய அனைத்து இனப் பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் சேவையை விவசாயிகளின் வீட்டு வாசலில் வழங்கும்

நோக்கத்துடன் நாடு தழுவிய செயற்கைமுறை கருவூட்டல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நான்காம் கட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 26.46 லட்சம் செயற்கைமுறை கருவூட்டல் மூலம் 12.96 லட்சம் பயனாளிகளின் 18.13 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

**15.3.10 கருவுறுதிறன் முகாம்**

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் 388 கருத்தரிப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 15.4 தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ் செயல்பாடுகள்

### 15.4.1 தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

மறுசீரமைக்கப்பட்ட தேசிய கால்நடை இயக்கத்தின் பின்வரும் செயல்பாடுகளின் கீழ்

தொழில்முனைவோர் மேம்பாட்டிற்கான, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- கிராமப்புற கோழிகளின் இன வளர்ச்சிக்காக தொழில் முனைவோர்களை உருவாக்குதல்
- சிறிய அசைபோடும் பிராணிகள் இன வளர்ச்சிக்காக தொழில் முனைவோரை உருவாக்குதல் (செம்மறி ஆடு/வெள்ளாடு வளர்ப்பு)
- பன்றி வளர்ப்பு தொழில் முனைவோரை ஊக்குவித்தல்
- பசுந்தீவனம் மற்றும் தீவனப் பயிர் உற்பத்தியில் தொழில் முனைவோரை ஊக்குவித்தல்.

### 15.4.1.1 தகுதியான நிறுவனங்கள்/நபர்கள்

இந்தத் திட்டத்தின் கீழ் தனிநபர்கள் / சுய உதவிக் குழு / விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் / விவசாயிகள் கூட்டுறவு / கூட்டுப் பொறுப்புக்

குழுக்கள் மற்றும் பிரிவு 8 நிறுவனங்கள் ஆகியவை மானியம் பெற தகுதியுடையவை ஆகும்.

**15.4.1.2 திட்டத்தின் கீழ் மானியங்கள்**

திட்டத்தின் மூலதனச் செலவில், 50% அல்லது அதிகபட்சம் தகுதியான மானியம், இதில் எது குறைவானதோ கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்:

- குஞ்சு பொரிப்பகம் கொண்ட 1100 கோழிகளுடன் கிராமப்புற கோழிப் பண்ணை, அமைக்க ரூ.25 இலட்சம் மானியம் பெற தகுதி.
- 105 முதல் 525 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் அளவு கொண்ட செம்மறியாடு / வெள்ளாடு பண்ணைக்கு ரூ. 10.00 இலட்சம் முதல் ரூ.50.00 இலட்சம் வரை மானியத்திற்கு தகுதி.

- 55 முதல் 110 பன்றிகள் அளவுள்ள பன்றி வளர்ப்பு பண்ணை ரூ.15 இலட்சம் முதல் ரூ.30 இலட்சம் வரை மானியம் பெற தகுதி.
- ஆண்டிற்கு 2000 முதல் 2400 மெட்ரிக் டன்கள் கொண்ட வைக்கோல் ஊறுகாய் / ஊறுகாய்ப்புல் தயாரிக்கும் அலகுகள் / நாள் ஒன்றுக்கு – 30 மெட்ரிக் டன் திறன் கொண்ட மொத்த கலப்பு தீவனம் தயாரிக்கும் அலகுகள் ரூ.50.00 இலட்சம் வரை மானியத்திற்கு தகுதி.

இத்திட்டத்தின் கீழ், இந்திய அரசு அறுபது விண்ணப்பங்களை அங்கீகரித்துள்ளது. இதன் மொத்த திட்டச் செலவு ரூ.48.03 கோடி மானியமாக ரூ.21.22 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.1.65 கோடி தொழில்முனைவோருக்கு முதல் தவணையாக வழங்கப்பட்டுள்ளது.

## 16. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

கால்நடைகளுக்கு தரமான மருத்துவ சிகிச்சை அளிப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. விவசாயிகள் மற்றும் பொது நலன் காப்பாளரும், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள், கால்நடைகளுக்கு மேம்பட்ட மருத்துவப் பாதுகாப்பை அளித்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்கிட கீழ்க்காணும் நோக்கங்களுடன் ஆசியாவின் முதல் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகமாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை 1989இல் நிறுவினார்.

- பல்கலைக்கழகம் நிர்ணயித்தவாறு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் புலங்களில் கல்வியினை அளித்தல்

- கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் புலங்களில் நவீன கற்றல் மற்றும் ஆராய்ச்சி செயல்பாட்டினை மேம்படுத்துதல்
- பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி செயல்பாட்டின் முடிவுகளை சம்பந்தப்பட்ட அரசு துறைகளின் ஒத்துழைப்புடன் கிராமப்புற மக்களுக்கு விரிவுபடுத்தும் பணியினை மேற்கொள்ளுதல்

## 16.1 பல்கலைக்கழகத்தின் பிரிவுகள்

### 16.1.1 பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள்

| வ. எண். | கல்லூரிகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை (பி.வி.எஸ்சி. & ஏ.எச்) | 120 |
| 2. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் (பி,வி.எஸ்சி. & ஏஎச்) | 100 |

| வ. எ ண். | கல்லூரிகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
| --- | --- | --- |
| 3. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு (பி,வி.எஸ்சி. & ஏஎச்) | 100 |
| 4. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி (பி,வி.எஸ்சி. & ஏஎச்) | 100 |
| 5. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் (பி,வி.எஸ்சி. & ஏஎச்) | 80 |
| 6. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி (பி,வி.எஸ்சி. & ஏஎச்) | 80 |
| 7. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை, (பி,வி.எஸ்சி. & ஏஎச்) | 80 |
| 8. | உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கோடுவெளி, திருவள்ளூர் (பி. டெக்.) | 60 |

| வ. எண். | கல்லூரிகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|
| 9. | கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி, ஓசூர் (பி. டெக்.) | 40 |
| | **மொத்தம்** | 760 |

### 16.1.2 பல்கலைக்கழகத்தின் புறநகர் ஆராய்ச்சி நிலையங்கள், ஆய்வகங்கள் மற்றும் மையங்கள்

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 1. | சென்னை | • கோழியின ஆராய்ச்சி நிலையம், மாதவரம்<br>• கால்நடைப் பண்ணை வளாகம், மாதவரம்<br>• பல்கலைக்கழக மைய ஆய்வகம், மாதவரம்<br>• நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம்<br>• நுண்ணுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம்<br>• விலங்குவழி பரவும் |

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| | | நோய்கள் ஆராய்ச்சிக் கூடம், மாதவரம்<br>• ஆய்வக விலங்கினப் பிரிவு, மாதவரம்<br>• கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகம், மாதவரம்<br>• கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடு சார் பரிமாற்றத் தளம், மாதவரம்<br>• உயிர்ப் பாதுகாப்பு நிலை III ஆய்வகம், மாதவரம்<br>• மைய சிகிச்சையியல் ஆய்வகம், வேப்பேரி<br>• மைய ஆய்வக கருவிக்கூடம், வேப்பேரி<br>• முதன்மைத் திசு ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மருந்தக மையம், வேப்பேரி |

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 2. | செங்கல்பட்டு | • கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம்<br>• கால்நடை ஊட்டச்சத்தியல் நிறுவனம், காட்டுப்பாக்கம்<br>• மத்திய தீவன தொழில்நுட்ப மையம், காட்டுப்பாக்கம்<br>• வேளாண் அறிவியல் மையம், காட்டுப்பாக்கம்<br>• கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், மேல்மருவத்தூர் |
| 3. | காஞ்சிபுரம் | • உழவர் பயிற்சி மையம், காஞ்சிபுரம் |
| 4. | தருமபுரி | • ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி மையம்<br>• கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் |


| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| | | பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்<br>• திருச்சி கருப்பு செம்மறி ஆட்டின மையம் |
| 5. | விழுப்புரம் | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் |
| 6. | சேலம் | • மேச்சேரி செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம், பொட்டனேரி<br>• கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்<br>• பறவையின நோயாய்வுக் கூடம், தலைவாசல் |
| 7. | ஈரோடு | • பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம், பர்கூர் |

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| | | • காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், ஈரோடு<br>• கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் |
| 8. | நீலகிரி | • செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், சாந்திநல்லா |
| 9. | நாமக்கல் | • கோழியின நோயறி மற்றும் நோய் கண்காணிப்பு ஆய்வகம்<br>• கால்நடை தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வுக் கூடம்<br>• கோழிகளுக்கான பாரம்பரிய கால்நடை மருத்துவ மூலிகை ஆராய்ச்சி மையம்<br>• வேளாண் அறிவியல் மையம் |

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 10. | சிவகங்கை | • புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், மானாமதுரை<br>• வேளாண் அறிவியல் மையம், குன்றக்குடி |
| 11. | புதுக்கோட்டை | • மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம் |
| 12. | மதுரை | • கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையம் |
| 13. | கள்ளக்குறிச்சி | • வேளாண் அறிவியல் மையம் |
| 14. | தேனி | • உழவர் பயிற்சி மையம் |
| 15. | திருவாரூர் | |
| 16. | இராமநாதபுரம் | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் |
| 17. | கன்னியாகுமரி | |
| 18. | வேலூர் | |
| 19. | திருவண்ணாமலை | |
| 20. | கிருஷ்ணகிரி | |
| 21. | கடலூர் | |
| 22. | பெரம்பலூர் | |
| 23. | திருப்பூர் | |
| 24. | கோயம்புத்தூர் | |

| வ. எண். | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 25. | தஞ்சாவூர் | |
| 26. | நாகப்பட்டினம் | |
| 27. | திண்டுக்கல் | |
| 28. | திருச்சிராப்பள்ளி | |
| 29. | விருதுநகர் | |
| 30. | தென்காசி | • வெள்ளாட்டின ஆராய்ச்சி மையம்<br>• நாட்டின நாய்கள் பாதுகாப்பு மண்டல மையம் |
| 31. | கரூர் | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்<br>• புறக்கடை கோழியின ஆராய்ச்சி மையம் |

## 16.1.3 நிருவாகக் கட்டமைப்பு



## 16.2 கல்வி

இப்பல்கலைக்கழகத்தில் அளிக்கப்படும் பட்ட / பட்டய வகுப்புகள் மற்றும் அதன் மாணவர் சேர்க்கை விவரங்கள் பின்வருமாறு :

| பட்ட / பட்டய வகுப்புகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|
| கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் விலங்கினப் பராமரிப்பில் இளநிலைப் பட்டம் | 660 |
| உணவுத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம் | 40 |
| கோழியினத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம் | 40 |
| பால்வளத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம் | 20 |
| கால்நடை மருத்துவ அறிவியலில் முதுநிலை பட்டம் | 160 |
| எம்.டெக் (உணவு தொழில்நுட்பம்) | 10 |
| எம்.டெக் (கோழியின தொழில்நுட்பம்) | 3 |
| எம்.டெக் (பால்வள தொழில்நுட்பம்) | 3 |
| எம்.டெக் (பால்வள வேதியியல்) | 3 |
| எம்.எஸ்சி. (உயிர்த் தொழில்நுட்பவியல்) | 3 |
| பி.எச்டி. (கால்நடைப் புலம்) | 88 |

| பட்ட / பட்டய வகுப்புகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|
| பி.எச்டி. (உயிர்த் தொழில் நுட்பவியல்) | 3 |
| பி.எச்.டி. (உணவு தொழில் நுட்பவியல்) | 5 |
| முதுநிலைப் பட்டயம் (4 தலைப்புகளில்) | 14 |
| தொலைநிலைக் கல்வி வழி முதுநிலைப் பட்டயம் (22 தலைப்புகளில்) | 240 |

**16.3 2023ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்**

- அலமாதியில் உள்ள மத்திய கால்நடை வளர்ப்புப் பண்ணையுடன் இணைந்து, "எருமையின மேளா – 2023" மற்றும் "கிராமப்புற பெண்களுக்கு அறிவியல் பூர்வமாக எருமையின வளர்ப்புடன் கூடிய பால் தொழில் முனைதல்" குறித்த இரண்டு நாள் பயிலரங்கம், கோடுவேளி உணவு மற்றும் பால்

தொழில்நுட்பக் கல்லூரியில் 14.06.2023 மற்றும் 15.06.2023 தேதிகளில் கொண்டாடப்பட்டதில் 100 விவசாயிகள் பயனடைந்தனர்.

- பல்கலைக்கழகத்தின் அனைத்து மருத்துவமனைகளிலும், மருத்துவமனை சேவைகளை கணினி மயப்படுத்த கால்நடை மருத்துவம் கற்பிக்கும் மருத்துவமனை தகவல் மற்றும் மேலாண்மை முறை வசதி துவக்கப்பட்டது.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 19.07.2023 முதல் 21.07.2023 வரை "மருந்தெச்சம் இல்லாத கால்நடைப் பொருட்களின் உற்பத்திக்கான மரபுவழி மூலிகை மருத்துவ ஆராய்ச்சிக்கான உலகளாவிய கண்ணோட்டம்" குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கும், கால்நடைகளுக்கான மரபுவழி மூலிகை

ஆராய்ச்சிக்கான இந்தியக் கூட்டமைப்பின் முதல் ஆண்டுக் கூட்டமும் நடைபெற்றன. இதில் அயல் நாடுகளைச் சார்ந்த அறிவியலறிஞர்கள் உட்பட மொத்தம் 174 நபர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

- காட்டுப்பாக்கத்தில் உள்ள கால்நடை ஊட்டச்சத்து நிறுவனத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தனுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்து உற்பத்தி அலகு தொடங்கப்பட்டது.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள கால்நடை பண்ணை வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள விதை பதப்படுத்தும் பிரிவு மற்றும் பதுங்கு குழி மற்றும் விடுதிக் காப்பாளர் அலுவலக கட்டிடம் ஆகியவை திறந்து வைக்கப்பட்டன.

- 22.09.2023 அன்று தேனி மாவட்டம் சின்னவோவுலாபுரம் கிராமத்தில் நடத்தப்பட்ட மலைமாடுகளின் பாதுகாப்பு பற்றிய மண்டல கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை தேனி மாவட்ட ஆட்சியர் துவக்கிவைத்தார்.
- தமிழக அரசின் உதவியுடன், தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, சின்னகோவிலாங்குளத்தில் நிறுவப்பட்ட ஆடு ஆராய்ச்சி மையத்தை, 23.09.2023 அன்று, மாண்புமிகு மீன்வளத்துறை – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.
- பல்கலைக்கழக அலுவலர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்களிடையே "முதல்வரின் முகவரி" குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு நாள்  பயிலரங்கு, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 10.10.2023 அன்றும், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி

மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 27.10.2023 அன்றும் நடத்தப்பட்டது.

- மத்திய அரசின் கால்நடை இனப்பெருக்கத்திற்கான தேசியத் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் "நீலகிரி மலையில் அருகிவரும் தோடா எருமைகளைப் பழங்குடியினர் பங்கேற்புடன் பாதுகாத்தல்" திட்டப் பயனாளிகளுக்கான ஆண்டு கலாச்சார விழா 13.10.2023 அன்று சாந்திநல்லா, செம்மறியாடு இனவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. இவ்விழாவில், உயர்தர தோடா எருமைகள் வளர்க்கும் பத்து தோடர் பழங்குடியினர்களுக்கு 'சிறந்த தோடா எருமை இனப்பராமரிப்பாளர்' விருது வழங்கப்பட்டது.
- "ஒருங்கிணைந்த கோழிச் சுகாதாரம் மூலம் நீடித்த நிலையான கோழி உற்பத்தி" எனும் மாநில அளவிலான கோழியினத் தொழில்

பங்குதாரர்களுக்கான பயிலரங்கம் 17.10.2023 அன்று உடுமலைப்பேட்டை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டதில் 121 கோழிப் பண்ணையாளர்கள், 34 பங்குதாரர்கள் மற்றும் 53 கோழிப்பண்ணைக் கூட்டாளிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

- தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் புதிதாக நிறுவப்பட உள்ள பல்கலைக்கழக கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு மாண்புமிகு தமிழக மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் 29.01.2024 அன்று அடிக்கல் நாட்டினார்.
- முத்தமிழ் அறிஞர் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவினை நினைவு கூறும் வகையில்

இப்பல்கலைக்கழகம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

- புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், மானாமதுரை 23.06.2023 அன்று காளையார்கோவிலில் "கால்நடைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் தனுவாஸ் தொழில்நுட்பங்கள்" பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தியதில் 130 கால்நடை வளர்ப்பாளர்கள் பயனடைந்தனர்.
- தூத்துக்குடி மாவட்டம், செக்காரக்குடி கிராமத்தில் 27.06.2023 அன்று கால்நடை பராமரிப்புத் துறை, தூத்துக்குடி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் ஆவின் ஆகியவை இணைந்து நடத்திய சிறப்பு கால்நடை மருத்துவ பராமரிப்பு மற்றும் விழிப்புணர்வு முகாமை மாண்புமிகு மீன்வளத்துறை – மீனவர் நலன் மற்றும்

கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

- நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து 27.06.2023 அன்று கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டு, 264 மாடுகள், 3 எருமைகள், 364 ஆடுகள், 79 நாய்கள், 413 கோழிகள், ஒரு குதிரை மற்றும் முயலுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.
- 27.06.2023 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம் கலிங்கமுடையான்பட்டியில் கால்நடை பராமரிப்பு மற்றும் ஆவின் துறை நடத்திய சிறப்பு கால்நடை மருத்துவ முகாமில், பல்கலைக்கழகம் உருவாக்கிய கால்நடை மற்றும் நாட்டுக் கோழிப் பண்ணையம் சார்ந்த நவீன தொழில்நுட்பங்கள் / உபகரணங்கள் மற்றும்

பல்வேறு கால்நடை இனங்கள் ஆகியவற்றினை திருச்சிராப்பள்ளி கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தால் காட்சிப்படுத்தப்பட்டது.

- 27.06.2023 அன்று எரசக்கநாயக்கனூர் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் ஆவின், தேனி நடத்திய சிறப்பு கால்நடை சுகாதார முகாமில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி பங்கேற்றது. இந்நிகழ்வில் 308 மாடுகள், 415 வெள்ளாடுகள், 210 செம்மறியாடுகள், 436 கோழிகள் மற்றும் 20 இதர கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், 157 கால்நடை மற்றும் கோழி பண்ணையாளர்கள் பயனடைந்தனர்.
- கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை,

கால்நடைப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், திருப்பூர், ஆவின் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை, திருப்பூர் மாவட்டம் ஆகியவை இணைந்து 27.06.2023 அன்று திருப்பூர் மாவட்டம் குண்டடம், ஆண்டிப்புதூர் கிராமத்தில் சிறப்பு கால்நடை சுகாதார முகாம் நடத்தியதன் வாயிலாக 1,535 கால்நடைகள் மற்றும் 222 விவசாயிகள் பயனடைந்தனர்.

- திருப்பூர் கால்நடைப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தத்தெடுக்கப்பட்ட கிராமமான வடுகபாளையம் புதூரில் திருப்பூர் கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து 28.06.2023 அன்று சிறப்பு சிகிச்சை முகாம் நடத்தப்பட்டதில் 47 கால்நடைகளும் 30 விவசாயிகளும் பயன்பெற்றனர்.

- மானாமதுரை புலிக்குளம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் 18.07.2023 அன்று நூறு மரக்கன்றுகள் நடப்பட்டன.
- கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் 21.07.2023 அன்று கால்நடை சுகாதார முகாமை நடத்தியது. இம்முகாமில், மொத்தம் 275 மாடுகள், 15 எருமைகள், 412 வெள்ளாடுகள், 215 செம்மறியாடுகள், 199 கோழிகள் மற்றும் 86 இதர விலங்கினங்களுக்கு பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.
- கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம், தலைவாசல் தொகுதிக்கு உட்பட்ட வரகூர் அம்மன் நகர் கிராமத்தில் 27.07.2023 அன்று கால்நடை நல முகாம் நடத்தியதில் 156

கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

- கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் ஆவின் ஆகியவை இணைந்து தூத்துக்குடி மாவட்டம் ககரம்பட்டி மற்றும் அங்கமங்கலம் கிராமங்களிலும், தென்காசி மாவட்டம் குரும்பலாபேரியிலும் முறையே 04.09.2023, 22.09.2023 மற்றும் 23.09.2023 தேதிகளில் கால்நடை நலம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்தின.
- 14.10.2023 அன்று சாந்திநல்லாவில் உள்ள செம்மறி ஆடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையத்தில் மரக்கன்று நடும் முகாம் நடத்தப்பட்டு வளாகத்தில் 100க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன.

## 16.4 ஆராய்ச்சி

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவம் மற்றும் பராமரிப்புத் துறை எதிர்கொள்ளும் புதிய சவால்களுக்கு ஏற்ப நவீன ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடிய வலுவான ஆராய்ச்சி கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக் கழகம், 12 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 15 ஆராய்ச்சி ஆய்வகங்களைத் தன்னகத்தே கொண்டு கால்நடை நலம், கால்நடை உற்பத்தி, கால்நடை மருத்துவ உயிரியல், விலங்குவழி நோய்கள், கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு, நோயறிதல் மற்றும் கண்காணித்தல், பாரம்பரிய கால்நடை மருத்துவம், கால்நடை மருந்துக் கண்காணிப்பு ஆகிய பிரிவுகளில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. 2023-24 ஆம் குறிப்பாண்டில், பல்வேறு தேசிய நிதி முகமைகளின் மூலம் தேர்வு முறையில் ரூபாய் 1,861.94 இலட்சம் மதிப்பீட்டில் 32

ஆராய்ச்சித் திட்டங்களை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

### 16.4.1 ஆராய்ச்சித் திட்டங்கள்

பன்றிகளில் ஏற்படும் பார்வோ நோயைக் கட்டுப்படுத்தவும், பன்றி வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தவும், "பன்றியின பார்வோ நச்சுயிரியின் தொற்று கண்காணிப்பு, மூலக்கூறு பகுப்பாய்வு மற்றும் தடுப்பூசி தயாரித்தல்" மற்றும் "நாட்டின மற்றும் உயர்ரக பன்றி வளர்ப்பாளர்களுக்கான நிலையான வாழ்வாதாரத்திற்கான தொழில்நுட்பத் தலையீடுகள்" எனும் இரண்டு திட்டங்களை மொத்தம் ரூ.74.58 இலட்சம் செலவில் தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ் திட்டங்களை செயல்படுத்திட இந்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

ஆடு வளர்ப்பினை அறிவியல் தொழில்நுட்பக் குறுக்கீடுகள் மூலம் மேம்படுத்தும் பொருட்டு, "தமிழ்நாட்டின் உள்நாட்டு ஆட்டினங்களில்

ஒட்டுண்ணி நோய்த்தொற்றுக்கு (*Haemonchus contortus*) எதிரான மரபணு எதிர்ப்பை மதிப்பீடு செய்தல்" மற்றும் "தமிழ்நாட்டின் வெள்ளாடுகளின் தீவனப் பற்றாக்குறையைப் போக்க வேளாண்–தொழில்துறை உபப் பொருட்களிலிருந்து தீவனம் அல்லாத நார்ச்சத்து அடிப்படையிலான மொத்த கலப்பு தீவனங்களை (TMR) உருவாக்குதல்" எனும் இரண்டு திட்டங்களை மொத்தம் ரூ.212.01 இலட்சம் செலவில் தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ் திட்டங்களை செயல்படுத்திட இந்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.9 லட்சம் செலவில் "இலாபகரமான நாட்டின கால்நடை வளர்ப்பிற்கான மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகள்" எனும் திட்டத்தினை ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ் செயல்படுத்திட இந்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

பசுந்தீவன பற்றாக்குறையை நிவர்த்தி செய்திடவும், பெருகி வரும் பசுந்தீவனத்தின்

தேவையை பூர்த்தி செய்திடவும் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன், "தமிழ்நாட்டில் பசுந்தீவனத்தை சேமித்து அதன் இருப்பினை மேம்படுத்துவதற்கான திட்டம்" எனும் திட்டத்தினை ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் இப்பல்கலைக்கழகம் செயல்படுத்தி வருகிறது

## 16.5 தொழில்நுட்பங்கள்

கால்நடை மற்றும் கோழியின நலம், உற்பத்தி, மதிப்பூட்டிய இறைச்சி மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி ஆகியவை சார்ந்த தொழில்நுட்பங்களை இப்பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. வர்த்தக மயமாக்கத்திற்குத் தயாராக உள்ள இப்பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்களாவன: தயிர் வடிகட்டி இயந்திரம், நாய்க் குட்டிகளுக்கான உணவு, மதிப்பூட்டிய பால் பொருட்கள் தயாரிப்புத் தொழில்நுட்பங்களான இஞ்சி மற்றும் கேரட் செறிவூட்டிய உறைபொதியாக்கம் செய்யப்பட்ட தூளைத் தயாரித்தல். பதனியைப் புதுமையான

உணவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதன் வாழ்நாள் தன்மையை அதிகரித்தல், நார்ச்சத்து மற்றும் புரதச்சத்து செறிவூட்டிய செயல்பாட்டு நூடுல்ஸ் தயாரித்தல், மூலிகை செறிவூட்டிய உறைநிலைப் பனிக்கூழ் தயாரித்தல், நிலக்கடலைப் பாலை பயன்படுத்திப் புரதச்சத்து நிறைந்த இனிப்புத் தயிர் தயாரித்தல், பால் ஊனீர் அடிப்படையிலான எதிர் ஆக்சிஜனேற்றி நிறைந்த பானம் தயாரித்தல், தயார் நிலையில் மீளமைப்பு செய்யும் செயல்பாட்டுப் பால் தூளைத் தயாரித்தல் மற்றும் நார்ச்சத்து நிறைந்த செயல்பாட்டுக் குல்பி தயாரித்தல் ஆகும்.

### 16.6 திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

கால்நடை மருத்துவம், விலங்கினம் மற்றும் உணவு அறிவியல் புலங்களில் ஏற்படும் அண்மைக்கால முன்னேற்றங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு இப்பல்கலைக்கழகம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் திறன்

மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களை நடத்தி வருகின்றது.

16.6.1 மாணவர்களுக்கான முயற்சிகள்

- ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை கல்விக்கூடம் (NAARM) உடன் இணைந்து, பல்கலைக்கழகம் 18.03.2023 அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் "கால்நடை மருத்துவப் பட்டதாரிகளிடையே தொழில் முனைவோருக்கான மென் திறன்களை மேம்படுத்துதல்" குறித்த தேசிய விழிப்புணர்வுப் பயிலரங்கை நடத்தியதன் வாயிலாக 99 கால்நடை மாணவர்கள் பயனடைந்தனர்.
- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே தமிழ் மொழியில் கணினி அறிவை ஊக்குவிக்கும் வகையில், சென்னை, தமிழ் இணையக் கல்விக்கழகத்துடன் இணைந்து, சென்னைக்

கால்நடை மருத்துவக் கல்லூரியில் கனி தமிழ் பேரவை 24.03.2023 அன்று நிறுவப்பட்டது.

- 27.03.2023 முதல் 31.03.2023 வரை சென்னை மாதவரத்தில் உள்ள மத்திய பாம்கூர் மற்றும் பனை தயாரிப்பு நிறுவனம், காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தில், பி.டெக் (உணவுத் தொழில்நுட்பம்) மூன்றாம் ஆண்டு பயிலும் 37 மாணவர்கள் பேக்கரி தயாரிப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை மேற்கொண்டனர்.
- ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை கல்லூரியில் பி.டெக் (கோழியின வளர்ப்பு தொழில்நுட்பம்) பயிலும் இறுதி மற்றும் முன் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு ரூபிகான் ஸ்கில் டெவலப்மென்ட் பிரைவேட் லிமிடெட் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி 29.03.2023 மற்றும் 30.03.2023 தேதிகளில் நடத்தப்பட்டது.
- "கால்நடை மாணவர்களுக்கான பண்ணை மற்றும் துணை விலங்கு பயிற்சி" என்ற

தலைப்பில் 13–வது மருத்துவ மாநாடு சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 23.08.2023 முதல் 25.08.2023 வரை நடத்தப்பட்டதில் 15 மாநிலங்களைச் சேர்ந்த 400 மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

- சர்வதேச சிறுதானியம்–2023 ஆண்டை நினைவுகூரும் வகையில், கோடுவெளி, உணவு மற்றும் பால் தொழில்நுட்பக் கல்லூரியில் 14.09.2023 அன்று "உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் சிறுதானியங்கள் ஒரு ஊட்டச்சத்து முன்னுதாரணம்" குறித்து நடத்தப்பட்ட தேசிய மாநாடு மற்றும் பயிலரங்கில் 600 மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியுடன் செயல்படும் பல்கலைக்கழக நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில்

இறுதி மற்றும் முன் இறுதி ஆண்டு பயிலும் இளங்கலை மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியுடன் செயல்படும் பல்கலைக்கழக நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2022-23 ஆம் ஆண்டில், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கோடுவெளி, உணவு மற்றும் பால் தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த மொத்தம் 28 மாணவர்கள் 4-6 வாரங்களுக்கு அமெரிக்காவின் ஓக்லஹோமா மாகாணப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றனர்.

### 16.6.2 ஆசிரியர்களுக்கான முயற்சிகள்

- "CRISPR / CAS அடிப்படையிலான மூலக்கூறு கண்டறியும் தளங்கள்" குறித்த பயிற்சி

03.07.2023 முதல் 07.07.2023 வரை கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளத்தில் நடத்தப்பட்டதில் ஆறு வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 20 பங்கேற்பாளர்கள் பயனடைந்தனர்.

- 08.07.2023 மற்றும் 09.07.2023 தேதிகளில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில், நோயறிதல் சைட்டாலஜி குறித்த தேசிய மாநாடு நடத்தப்பட்டதில் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து 100 நபர்கள் பங்கேற்றனர்.
- கால்நடை ஒட்டுண்ணிகளின் முன்னேற்றத்திற்கான உலக சங்கத்துடன் இணைந்து, "ஒட்டுண்ணிகள்: உலகளாவிய பாதிப்புகள், உள்ளூர் தீர்வுகள்" என்ற தலைப்பில் 29-வது சர்வதேச மாநாடு சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 20.08.2023 முதல் 24.08.2023 வரை நடத்தப்பட்டதில்

56 நாடுகளில் இருந்து 350 அறிவியலறிஞர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியுடன் செயல்படும் பல்கலைக் கழக நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2022–23 ஆம் ஆண்டில், பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மொத்தம் 24ஆசிரியர்கள் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியாவில் உள்ள பல்வேறு கால்நடைப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று நவீன கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி முறைகளில் பயிற்சிபெற்றனர்.

## 16.7 சிகிச்சையியல் பணிகள்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சிறந்த பயிற்றுவிப்பு கால்நடை மருத்துவமனை வசதிகளைக் கொண்டு கால்நடை மற்றும் செல்லப் பிராணிகளுக்கு சிசிச்சை அளித்து வருகின்றது. 2023ஆம் ஆண்டில் மொத்தம்

3,02,288 கால்நடை மற்றும் செல்லப் பிராணிகளுக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. மீயொலிக் கருவி (Ultrasonography), உள்நோக்குக் கருவி (Endoscope), இதய துடிப்பலைப் பதிவுக் கருவி (Electrocardiography), எலும்பு முறிவுச் சிகிச்சை (Orthopaedics), இரத்தச் சுத்திகரிப்புக் கருவி (Haemodialysis), கண் மருத்துவம் (Ophthalmology), தோல் நோயியல் (Dermatology), நாய்களுக்கான இரத்த வங்கி ஆகிய உயர்தர மருத்துவ வசதிகளை இப்பல்கலைக்கழகத்தின் மருத்துவமனைகள் பெற்றுள்ளன. சென்னை மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிடி ஸ்கேன் வசதிகளும் உள்ளன.

இவ்வறிக்கை காலத்தில், தமிழ் நாடு அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த 200 கால்நடை மருத்துவர்களுக்கு நவீன சிகிச்சையியல் மருத்துவம் குறித்து 12 பயிற்சிகள்

நடத்தப்பட்டன. இது தவிர, உலகளாவிய தரத்திற்கு ஈடாக நவீன கால்நடை மருத்துவப் பயிற்சி குறித்த தேசிய மாநாடு நடத்தப்பட்டதில் 150 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### 16.8 விரிவாக்கப் பணிகள்

விவசாயிகள், கிராமப்புற மகளிர் மற்றும் இளைஞர்கள், பள்ளி இடைநின்றோர், சுய உதவிக்குழுவினர் ஆகியோரது வாழ்வாதாரத்தைக் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பின் மூலம் மேம்படுத்தும் நோக்கில், கறவை மாடு வளர்ப்பு, வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு, கால்நடைத் தீவனம் மற்றும் பசுந்தீவனப் பயிர் உற்பத்தி உள்ளிட்ட தலைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், பண்ணைப் பரிசோதனைத் திட்டங்கள், முதல்நிலைச் செயல் விளக்கத் திட்டங்கள் ஆகிய விரிவாக்கப் பணிகள் இப்பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் வாயிலாகக் கால்நடை மற்றும் கோழியினத் தொழில் நுட்பங்களைப் பிரபலப்படுத்தும் பணியினையும் இப்பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

2023ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு விரிவாக்க மையங்கள் வாயிலாக மொத்தம் 53,605 கால்நடை விவசாயிகளுக்கு 4,118 பயிற்சிகளும், 60,774 எண்ணிக்கையில் ஆலோசனைச் சேவைகளும் அளிக்கப்பட்டன. இவை தவிர கால்நடை விவசாயிகளுக்கு பண்ணை இடுபொருட்களும் வழங்கப்பட்டன. இக் குறிப்பாண்டில் கால்நடைப் பண்ணையாளர்கள் பயனுறும் வகையிலான விரிவாக்கப் பணி சார்ந்து நடத்தப்பட்ட கருத்தரங்குகள் பின்வருமாறு:

- காட்டுப்பாக்கம், கால்நடை ஊட்டச்சத்தியல் நிறுவனத்தில் இந்திய அரசாங்கத்தின் தேசிய கால்நடை இயக்கத்தின் உதவியுடன், "மேம்பட்ட தொழில் நுட்பங்கள் மூலம்

மதுவடிப்பாலைத் தானியக் கழிவுகளை சேர்த்து கறவை மாடுகளுக்கான குச்சித் தீவனம் தயாரித்தல்" குறித்த பயிற்சி 80 கால்நடை விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

- நபார்டு வங்கியின் உதவியுடன், "கிராமப்புற பால் பண்ணையாளர்களிடையே அறிவியல் சமச்சீர் தீவன நுட்பத்தின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குதல்" குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிலரங்கம், வேலூர், கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 12.05.2023அன்று நடத்தப்பட்டு, "தனுவாஸ் சமச்சீர் தீவனம்" என்ற மொபைல் செயலி வெளியிடப்பட்டது. இதில் 120 பால் பண்ணையாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.
- 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்துடன் இணைந்து, இப்பல்கலைக்கழகம் 24.05.2023 முதல் 26.05.2023 வரை திருநெல்வேலி

கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் "லாபகரமான பால் பண்ணையம்" குறித்த பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டதில் 36 பயிற்சியாளர்கள் பயனடைந்தனர்.

- தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றத்தின் உதவியுடன், "வெள்ளாடு மற்றும் செம்மறியாடு உற்பத்தியை பெருக்கத் தொழில் நுட்பங்களைப் பிரபலப்படுத்துதல் மூலம் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்" குறித்த மாநில அளவிலான பயிற்சி நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 08.08.2023 முதல் 10.08.2023 வரை நடத்தப்பட்டதில் 52 செம்மறி ஆடு மற்றும் வெள்ளாட்டுப் பண்ணையாளர்கள் பயனடைந்தனர்.

- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், "பசுந்தீவனம் மற்றும் தீவன விதை உற்பத்திக்கான தொழில்நுட்பங்கள்" குறித்த பயிற்சி, சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் 07.08.2023 முதல் 11.08.2023 வரையிலும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 21.08.2023 முதல் 25.08.2023 வரையிலும் நடத்தப்பட்டதில் 35 கால்நடை விவசாயிகள் கலந்து கொண்டு தீவன விதைகள் பெற்றுப் பயனடைந்தனர்.
- 24.08.2023 அன்று இராமநாதபுரம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், "அறிவியல் ரீதியிலான புறக்கடைக் கோழி வளர்ப்பு" குறித்த செயல்விளக்கத்துடன் கூடிய பயிலரங்கம்

நடத்தப்பட்டதில் 30 கால்நடை விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

- தமிழ்நாடு கிராமப்புற மாற்றம் திட்ட நிதியுதவியுடன் திருச்சியில் உள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் "நாட்டுக் கோழி வளர்ப்பு" குறித்த பயிற்சியும், புதுக்கோட்டை, தனுவாஸ்–மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையத்தில் "புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கான ஆடு வளர்ப்பு மற்றும் மேலாண்மைப் பயிற்சியும்" நடத்தப்பட்டதில் 72 கோழி வளர்ப்போர் கலந்து கொண்டு இடுபொருட்கள் பெற்றுப் பயனடைந்தனர்,
- சர்வதேச சிறுதானியம்–2023 ஆண்டை நினைவுகூரும் வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள சிதலப்பட்டினம் மற்றும் சூலாங்குறிச்சி ஆகிய கிராமங்களில் முறையே 12.10.2023 மற்றும் 26.10.2023 தேதிகளில்

விழுப்புரம், வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் "சிறுதானியம் உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டுதல்" குறித்த சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 131 விவசாயப் பெண்கள் பயனடைந்தனர்.

- 26.10.2023 அன்று நாமக்கல் வேளாண் அறிவியல் மையத்தில் "தாவர வகைகள் மற்றும் விவசாயிகளின் பாதுகாப்பு உரிமைச் சட்டம், 2001" குறித்த பயிற்சி நடத்தப்பட்டது.

### 16.8.1 தொலைநிலைக் கல்வி வகுப்புகள்

கால்நடை மருத்துவ அறிவியலில் உள்ள நவீனத் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு 22 பாடப்பிரிவுகளில் முதுநிலைப் பட்டயப் படிப்புகள் கால்நடை மருத்துவர்களுக்குத் தொலைநிலைக் கல்வி இயக்ககம் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர, கால்நடை மற்றும் கோழியின உற்பத்தியை அதிகரித்து கிராமப்புற வருவாயைப் பெருக்கும்

பொருட்டு 10 தலைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் 10 தலைப்புகளில் சுய வேலை வாய்ப்பு பயிற்சிகளும் கால்நடை வளர்ப்போர் மற்றும் ஊரக இளைஞர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன.

2023–24 ஆம் ஆண்டில், தொலைதூரக் கல்வி முறையில் வழங்கப்படும் 18 முதுகலை பட்டயப் படிப்புகளுக்கு 93 மாணவர்களும், மூன்று திறன் மேம்பாட்டுப் படிப்புகளுக்கு 11 நபர்களும், ஏழு சுயவேலைவாய்ப்புப் படிப்புகளுக்கு 343 கால்நடை விவசாயிகள் மற்றும் வேலையில்லாத இளைஞர்களும் சேர்ந்துள்ளனர்.

**16.9 விருதுகள் / அங்கீகாரங்கள்**

- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தேசிய தரவரிசை நிறுவனத்தின் (NIRF) தரவரிசைப் பட்டியல்– 2023இல் இந்தியாவின் அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களில் 12–வது இடத்தைப் பெற்றுள்ளது.

- 26.07.2023 அன்று ராஜ்பவனில் நடைபெற்ற தமிழ்நாட்டின் உயர்கல்வியில் சிறந்து விளங்கும் நிறுவனம்/பல்கலைக்கழகங்களுக்கான பாராட்டுக் கூட்டத்தில் இப்பல்கலைக்கழகம் பங்கேற்றது. இந்நிகழ்வில், தேசிய தரவரிசைப் பட்டியல் (NIRF) 2023இல் 12–வது இடத்தினை (விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறையில்) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பெற்றமைக்காக பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.
- கால்நடை மருத்துவ அறிவியலின் முன்னேற்றத்திற்கான குறிப்பிடத்தக்க பங்களித்தமைக்காக முனைவர் க.ந.செல்வக்குமார், துணைவேந்தர். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் முனைவர்

அ.இளங்கோ, முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் ஆகியோர்களுக்கு தேசிய கால்நடை அறிவியல் கல்விச்சாலையின் சக உறுப்பினர் பதவி 01.07.2023 அன்று அளிக்கப்பட்டது.

- 2021ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு விஞ்ஞானி விருது, முனைவர் அ.இளங்கோ, முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் மற்றும் முனைவர் இரா.ராஜேந்திரன், பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறை, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை, ஆகிய இரு பேராசிரியர்களுக்கு தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்– வேளாண்காடு வளர்ப்பு வலைத் திட்டத்தின் கீழ்

2021–22ஆம் ஆண்டில் மேற்கொண்ட சிறந்த வேளாண்காடு வளர்ப்பு விரிவாக்கப் பணிகளுக்காக காட்டுப்பாக்கத்தில் உள்ள கால்நடை ஊட்டச்சத்து நிறுவனத்திற்கு டாக்டர். எஸ்.சின்னமணி விருது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தினரால் வழங்கப்பட்டது.

- உணவு மற்றும் பால் தொழில்நுட்பக் கல்லூரி (CFDT), கோடுவெளி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் FSSAI ஆல் Eat right Campus என சான்றளிக்கப்பட்டது.
- செம்மறியாடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், சாண்டிநல்லாவின் உதவியுடன் அழிந்து வரும் தோடா இனத்தை பாதுகாத்ததற்காக திரு. ரஞ்சித் குட்டன், தோடா விவசாயி அவர்கள் கர்னாலில் உள்ள தேசிய கால்நடை மரபணு வள

பணியகத்திடம் இருந்து 23.12.2023 அன்று இன பாதுகாப்பு விருதைப் பெற்றார்.

- அசீல் இனக் கோழிகளைப் பாதுகாப்பதற்காக பல்கலைக்கழகத்தின் கோழியின ஆராய்ச்சி நிலையத்திற்கு கர்னாலின் தேசிய கால்நடை மரபியல் வளப் பணியகத்தால் நிறுவனம்/சமூகப் பிரிவில் இரண்டாம் பரிசு 23.12.2023 அன்று வழங்கப்பட்டது.
- பர்கூர் இன மாடுகளைப் பாதுகாப்பதற்காக பல்கலைக்கழகத்தின் பர்கூர் கால்நடை ஆராய்ச்சி நிலையத்திற்கு, கர்னாலில் உள்ள தேசிய கால்நடை மரபணு வளப் பணியகத்தால் 23.12.2023 அன்று மூன்றாம் பரிசு வழங்கப்பட்டது.
- புது தில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் / மத்திய வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் / நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிடையே

"சிறந்த வேளாண் மின் வளக் கூட்டமைப்பு (CeRA) பயன்பாட்டிற்கான பாராட்டுச் சான்றிதழ்–2022" தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதியாண்டு B.V.Sc. & A.H. பயிலும் மாணவர் எஸ்.லட்சுமணன், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய முதுகலை மாணவர் சேர்க்கைக்கான 2023ஆம் ஆண்டிற்கான அகில இந்திய நுழைவுத் தேர்வில் (ICAR AIEEA PG 2023) கால்நடை உயிர்த் தொழில்நுட்பம் பாடப் பிரிவில் முதல் மதிப்பெண் பெற்றுள்ளார்.
- நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவி செல்வி துளசிமதி முருகேசன், சாவோ போலோ, பிரேசிலில் நடைபெற்ற ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டியில் ஒற்றையர் பிரிவில் தங்கப்

பதக்கமும், பெண்கள் இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கமும், கலப்பு இரட்டையர் பிரிவில் வெண்கலப் பதக்கமும் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

- பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள நான்கு தொழில்நுட்பங்களுக்கு 2023ஆம் ஆண்டில் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.

    1. உண்ணிகளைக் கட்டுப்படுத்த டைமெதிகான் உருவாக்கம் மற்றும் அதன் செயல்முறை
    2. நாயினங்களின் இரத்த சிகப்பணுக்கள் / தட்டுக்களுடன் பிணைக்கப்பட்ட நோயெதிர்ப்புக் காரணிகளைக் கண்டறிதல் மற்றும் அதற்கான சாதனம் உருவாக்கம்
    3. காயமடைந்த விலங்கைத் தூக்கிச் செல்வதற்கான இயந்திர அகலத்தை சரி

செய்யக்கூடிய இரட்டை ஒருங்கிணைப்பு சாதனம்

4. கால்நடைகளின் தகவலை கால்நடைகளில் பதிக்க உதவும் பச்சை குத்தும் ஊசிகளுடன் ஒரு சுத்தியல்

## 16.10 கால்நடைத் துறையில் துவக்க நிலை நிறுவனங்கள்

கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் அதன் சார்புத் துறைகளில் துவக்க நிலை நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் கால்நடை அறிவியல் துவக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பினை (VIF@TANUVAS) இப்பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. 2023ஆம் ஆண்டில் இந்த அமைப்பின் முக்கிய நடவடிக்கைகளாவன:

- புதிய கால்நடை பராமரிப்பு சார்ந்த பொருட்கள்/தொழில்நுட்பங்களை உருவாக்கு பொருட்டு 2023ஆம் ஆண்டில், 16 துவக்க

நிலை நிறுவனங்கள் கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் பதிவு செய்து பயனடைந்துள்ளன.

- கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் நிறுவப்பட்ட "IEDP – கால்நடை மருத்துவ மாணவர் மையம்" 10.01.2023 அன்று கால்நடை பராமரிப்பு ஆணையர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வின் போது, கைமெர்டெக் இன்னோவேஷன்ஸ் நிறுவனம் உருவாக்கிய கோழி தீவன ஆலைக்கான 'பீட் எக்ஸ்பிரஸ்'. நாய்களைத் தாக்கும் பார்வோ நோய்க்கென டிரான்ஸ்சைன்ஸ் இன்னோவேட்டிவ் டெக்னாலஜிஸ் உருவாக்கிய 'CPV Ab நோயறி சாதனம்'. கோழிகளுக்கு வைட்டமின் சப்ளிமெண்ட்டுகளுக்காக ஜெஷ்ரோன் பயோடெக் சொல்யூஷன்ஸ் உருவாக்கிய 'விடாஷீட்' வெளியிடப்பட்டன.

- 09.03.2023 முதல் 11.03.2023 வரை "வடிவமைப்பு சிந்தனை" குறித்த பயிலரங்கு நடத்தப்பட்டதில் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளைச் சேர்ந்த 40 கால்நடை மருத்துவ மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- 2023 ஜூன் மாதத்தில் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் "டெக்–தொழில்முனைவோர் துவக்க முகாம் மற்றும் ஐடியாதான் 2.0" குறித்த பயிலரங்கம் நடத்தப்பட்டதில் 520 மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- 03.08.2023 அன்று முதல் பெண்கள் தொழில்முனைவோர் சந்திப்பு மற்றும் "லீடர்ஸ் இன் ஹீல்ஸ்; உலகெங்கிலும் உள்ள பெண் தொழில்முனைவோரை ஊக்குவித்தல்" குறித்த ஒரு நாள் பயிலரங்கம் நடத்தப்பட்டதில் 120 பெண்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

- 11.09.2023 முதல் 15.12.2023 நாட்களுக்குள் "கால்நடை தொழில் முனைவோர் மற்றும் ஆளுமை மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு திறன்கள்" குறித்து 16 குழுக்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டதில், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், நாமக்கல், திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு ஆகிய இடங்களைச் சேர்ந்த 320 கால்நடை மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- VIF@TANUVASஇன் பயனாளியான ஜெஷ்ரோன் பயோடெக் சொல்யூஷன்ஸ் நிறுவனம், டான்சீட் 5.0 மானியத்தின் கீழ் (பெண்கள் தலைமையிலான தொடக்க வகை) StartupTN இலிருந்து ரூ.15.00 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளது.
- 05.10.2023 அன்று தமிழ்நாடு அரசாங்கத்தின் தமிழ்நாடு துவக்கநிலை புத்தாக்க

இயக்ககத்திலிருந்து (TANSIM), VIF @ TANUVAS அமைப்பு செயல்பாட்டுச் செலவினங்களுக்காக ரூ.3.00 லட்சத்தைப் பெற்றுள்ளது.

- 04.12.2023 முதல் 06.12.2023 வரை, இந்திய அரசாங்கத்தின் DBT – BIRAC நிறுவனம் நடத்திய "குளோபல் பயோ இந்தியா 2023" எனும் கண்காட்சியில் VIF@TANUVAS அதன் பயனாளிகளால் உருவாக்கப்பட்ட தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தியது.
- 2023ஆம் ஆண்டில், VIF@TANUVASஇன் பயனாளிகளான சிட்ரஸ் அக்ரோ–வெட் பிரைவேட் லிமிடெட், டயக்னாமிக்ஸ் பிரைவேட் லிமிடெட், மூர்ஸ் சிஸ்டெம்ஸ் அண்ட் அக்ரோமேலின் பிரைவேட் லிமிடெட் ஆகியனவற்றிற்கு "வெற்றிகரமான தொழில்முனைவோர்" பட்டம் வழங்கப்பட்டது.

### 16.11 தொழிலக–கல்வி நிறுவனத் தொடர்பு

தொழிலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிடையே ஆராய்ச்சி மற்றும் கல்வித் திட்டங்களில் இணைந்து செயல்படும் நோக்குடன் 2023–24ஆம் ஆண்டு, பல்கலைக்கழகம் கீழ்க்குறிப்பிட்டுள்ள தேசிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது:

- ✓ கேரளா கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், வயநாடு, கேரளா
- ✓ சென்னை முதலைப் பண்ணை, சென்னை
- ✓ இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேக்கேஜிங், மும்பை
- ✓ தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில்முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனம், தஞ்சாவூர்
- ✓ பயோடெக் கன்சார்சியம் இந்தியா லிமிடெட், புதுதில்லி

- ✓ அசாம் வேளாண் பல்கலைக்கழகம், கானாபாரா, குவாஹத்தி
- ✓ சென்னை நீரிழிவு ஆராய்ச்சி அறக்கட்டளை, சென்னை
- ✓ தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை

**16.12 2024–25ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைகள்**

ஒரே சுகாதார அணுகுமுறையின் மூலம் இப்பல்கலைக்கழகம் கால்நடைத் துறையை மட்டுமல்ல, மனித நல்வாழ்வினையும் மேம்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகமானது தேசிய மற்றும் சர்வதேச அளவிலான பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து மக்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஆரோக்கியத்தைப் பெறும் பொருட்டு ஒரே சுகாதார அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலம்

விலங்குவழி பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த வழிவகை செய்யப்படுகிறது.

இவை அனைத்தினையும் கருத்திற்கொண்டு இப்பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்தியுள்ளது:

- ஒருங்கிணைந்த ஒரே சுகாதார அணுகுமுறையை வலுப்படுத்துதல்
- மாடுகள் மற்றும் எருமைகளில் மலட்டுத் தன்மை மற்று தொடர் சினையூட்டல் சிக்கல்களுக்கு இனப்பெருக்க உதவி தொழில் நுட்பங்கள் மூலம் தீர்வுக்கு காணுதல்
- தமிழகத்தின் நாட்டின கால்நடை மற்றும் கோழியினங்களைப் பாதுகாத்தல்
- கறவை மாடுகளில் மீத்தேன் உமிழ்வைக் குறைத்து பால் உற்பத்தியை மேம்படுத்துதல்

- தீவன விதைப் பண்ணைகளை நிறுவுவதன் மூலம் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குதல்
- தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், கறவை மாடுகளில் பால் காய்ச்சலைத் தணிக்கவும், தனுவாஸ் கிராண்ட் மற்றும் அயோனிக் உப்புகளை கூடுதல் ஊட்டச்சத்தாக அளிப்பதனைப் பிரபலப்படுத்துதல்
- கறவை மாடுகளுக்கு ஏற்படும் தோல் கழலை நோய் உள்ளிட்ட கால்நடைகளில் உருவாகும் நோய்களுக்கான நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்துதல்
- கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இணைந்து செயல்பட பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டிணைவு
- வேலையற்ற இளைஞர்கள் மற்றும் ஊரகப் பெண்களுக்குக் கால்நடைப் பராமரிப்பு

நடவடிக்கைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்

- கால்நடை மருத்துவர்களுக்கான தொடர் கால்நடை மருத்துவக் கல்வித் திட்டம்
- சிறந்த மேலாண்மை முறைகள் மற்றும் செயலிகள் மூலம் மின் ஆளுமையினை மேம்படுத்துதல்
- தொழிலகம்–பல்கலைக்கழகம் இணைந்த ஆராய்ச்சிக் கூட்டமைப்பினை நிறுவி தொழிலகங்களின் தேவையறிந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் புதிய துவக்கநிலை நிறுவனங்களை ஊக்குவித்தல்
- கால்நடைகளில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ள வழிமுறைகள் / தணிப்புத் தொழில்நுட்பங்களை உருவாக்குதல்

- நடப்பிலுள்ள "ஆய்வகத்திலிருந்து களம்" நோக்கிய அணுகுமுறையினைத் தொடர்ந்து இப்பல்கலைக்கழகத்தின் பார்வை "களநிலையிலிருந்து ஆய்வகம்" நோக்கி கால்நடை விவசாயிகள் எதிர்கொள்ளும் களப்பிரச்சனைகளுக்கு முன்னுரிமையளித்து ஆய்வக ஆராய்ச்சி வழி தீர்வுகாணுதல்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ அறிவியல் புலத்தில் நவீனக் கல்வி முறையுடன் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் கால்நடை, கோழி மற்றும் உணவு அறிவியல் துறைகளின் முன்னேற்றம் அடைய வழிவகை செய்கிறது.

# 17. வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–25

| வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–25 | | | | |
|---|---|---|---|---|
| | | | | ரூபாய் ஆயிரத்தில் |
| **திட்டங்கள்** | **வருவாய்** | **மூலதனம்** | **கடன்** | **மொத்தம்** |
| மாநில செலவினங்கள் | 10359553 | 0 | 0 | 10359553 |
| மத்திய அரசு திட்டங்கள் | 11 | 0 | 0 | 11 |
| வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள் (IAMWARM–World Bank Scheme) | 5043 | 0 | 0 | 5043 |
| மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 72026 | 0 | 0 | 72026 |
| உள்கட்டமைப்பு (மாநில நிதி) | 0 | 101901 | 0 | 101901 |
| உள்கட்டமைப்பு – NABARD | 0 | 178484 | 0 | 178484 |
| உள்கட்டமைப்பு – AIIRLIVAS | 0 | 196600 | 0 | 196600 |
| **00602 கால்நடை பராமரிப்புத் துறை** | **10436633** | **476985** | **0** | **10913618** |
| **00601 – தலைமைச் செயலகம்** | **109328** | **0** | **5000** | **114328** |
| **00603 – தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்** | **3461464** | **0** | **0** | **3461464** |
| **மொத்த மானியம்** | **14007425** | **476985** | **5000** | **14489410** |

## 18. முடிவுரை

கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளம் தமிழகத்தின் முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக உள்ளது. நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் கிராமப்புற சமூகங்களை மேம்படுத்துவதற்கான மகத்தான ஆற்றலை இந்தத் துறை கொண்டுள்ளது. கால்நடை வளர்ப்பின் பல்வேறு அம்சங்களில் விரிவான திட்டங்களை செயல்படுத்துவதில் அரசாங்கத்தின் முயற்சிகள் கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வருமான வளர்ச்சியை உறுதி செய்வதற்கு இன்றியமையாதவை.

கால்நடை மருத்துவ சேவைகள் மற்றும் பிற வசதிகளை நவீனமயமாக்குவது, துறையின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மைக்கு முக்கியமானது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

தலைமையின் கீழ், இத்துறையின் நீண்டகால செழிப்பை உறுதி செய்வதற்காக இந்த முயற்சிகளை நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும் முடியும். திட்டமிடல் மற்றும் தொலைநோக்கு தலைமையுடன், கால்நடை வளர்ப்பு தமிழ்நாட்டின் கிராமப் பொருளாதாரத்தின் அடித்தளமாக அமையும்.

**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
**மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்**
**கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்**




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கால்நடை உதவி மருத்துவர்களுக்கு 16.02.2024 அன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெரம்பலூரில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் சிறிய அளவிலான நாட்டுக்கோழித் திட்டப்பலன்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சைதாப்பேட்டையில் புதிதாகக் கட்டப்பட்ட கால்நடை பன்முக மருத்துவமனை கட்டிடத்தை 27.02.2024 அன்று திறந்து வைத்தார்.



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் வெள்ள நிவாரண நடவடிக்கையாக கால்நடை நல வாரியத்தால் நடத்தப்பட்ட குதிரைகளுக்கான சுகாதார முகாமை ஆய்வு செய்து சேப்பாக்கம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள வளர்ப்பு குதிரைகளுக்கு தீவனம் மற்றும் தீவனப் பொருட்களை வழங்கினார்.



மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையை ஆய்வு செய்தார்.



மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையின் காளை கொட்டகையை ஆய்வு மேற்கொண்டார்.



மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் புதிதாக கட்டப்பட்டுள்ள பாலினம் பிரிக்கப்பட்ட விந்து ஆய்வகத்தை ஆய்வு செய்தார்.




கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையில் உள்ள அயலின கால்நடை பெருக்குப் பண்ணையை ஆய்வு செய்தார்.



கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு, அரசால் நடத்தப்பட்ட சிறப்பு கால்நடை முகாம்களை ஆய்வு செய்தார்.




மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்களைத் தொடங்கி வைத்தார்.




மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையில் உள்ள அயலின கால்நடை பெருக்குப் பண்ணையின் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தை ஆய்வு செய்தார்.

## கால்நடை கணக்கெடுப்பு – 2019


### முக்கிய இனங்களின் பங்களிப்பு





### பால் உற்பத்தி மதிப்பீடு (இலட்சம் டன்களில்)




## முட்டை உற்பத்தி மதிப்பீடு (இலட்சம் எண்ணிக்கையில்)





## இறைச்சி உற்பத்தி மதிப்பீடு (இலட்சம் கிலோ கிராம்களில்)



**தனிநபருக்கு ஒரு நாளைக்குக் கிடைக்கும்
பால் அளவு (கிராம்களில்)**




**தனிநபருக்கு ஒரு ஆண்டில் கிடைக்கும்
முட்டைகளின் எண்ணிக்கை**



## உள்நாட்டு மாட்டினங்கள்



ஆலம்பாடி



காங்கேயம்



பர்கூர்



புலிக்குளம்



உம்பளாச்சேரி



தோடா எருமை

## உள்நாட்டு செம்மறியாட்டினங்கள்



திருச்சி கருப்பு



கீழக்கரிசல்



சென்னை சிவப்பு



நீலகிரி



இராமநாதபுரம் வெள்ளை



கோயம்புத்தூர்

## உள்நாட்டு செம்மறியாட்டினங்கள்



செவ்வாடு



மேச்சேரி



வேம்பூர்



கச்சகட்டி கருப்பு

## உள்நாட்டு வெள்ளாட்டினங்கள்



கன்னி ஆடு



சேலம் கருப்பு



கொடி ஆடு

## உள்நாட்டு நாய் இனங்கள்



இராஜபாளையம்



சிப்பிப்பாறை



கன்னி



கோம்பை

## தமிழ்நாட்டில் வளர்க்கப்படும் கோழியினங்கள்



அசீல்



கடக்நாத்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.